# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 31 சனிக்கிழமை (14-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:199


## வடக்கு - கிழக்குத் தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு

# அரசாங்கத்தின் யோசனைத் திட்டம்

# விரைவில் புலிகளுக்கு எழுத்தில்!

## அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட ஏற்பாடுகள் அவர்களைத் திருப்திப்படுத்துமா என்பதே கேள்வி

கொழும்பு,ஜூன்14

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ள - வடக்கு கிழக்கு தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு (Provisional Administrative Structure) குறித்து - விளக்கக் குறிப்பு ஒன்றை அரசு விரைவில் விடுதலைப் புலிகளுக்கு எழுத்தில் அனுப்பிவைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

**எனினும், அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு உட்பட்ட ஓர் ஏற்பாடாகவே இது இருக்கும் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. அத்தகைய ஏற்பாடு புலிகளின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யுமா என்பது குறித்து அவதானிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.**

விடுதலைப் புலிகளின் அதிகளவு பங்களிப்புடன் கூடிய அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு, அதாவது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற தமது கோரிக்கை திருப்தி செய்யக்கூடிய வகையில் நிறைவேற்றப்படாததால் டோக்கியோவில் நடைபெற்ற உதவும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பங்குபற்றவில்லை.

இந்நிலையில், தற்காலிக நிர்வாகக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் விடுதலைப் புலிகள் உடனே பேச்சு நடத்த முன்வர வேண்டும்

### அமெரிக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றது

விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் உடனடியாகப் பேச்சு நடத்த முன்வர வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றது.

இதனைத் தெரிவித்திருக்கும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் போர்ட் டெய்லர், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாததன் மூலம் விடுதலைப் புலிகள் அரிய வாய்ப்பொன்றை இழந்திருக்கின்றனர் எனவும் கூறியிருக்கின்றார்.

மாநாட்டைப் பகிஷ்கரிப்பதற்கு விடுதலைப் புலிகள் தெரிவித்த காரணங்கள் மாநாட்டு மேசையில் தீர்த்துக் கொள்ளப்படவேண்டியவை எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே, விடுதலைப் புலிகள் - அரசு மீண்டும் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோருகின்றது எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

# போராளிகள் நடமாட்டம் கடலில் தொடரும்; படையினர் தடுத்தால் மோதல் ஏற்படக்கூடும்!

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



*கிளிநொச்சியில் நேற்று கண்காணிப்புக் குழுத்தலைவரை தமிழ்ச்செல்வன் வரவேற்கும் காட்சி.*

கிளிநொச்சி,ஜூன்14

எமது கடற் பிரதேசத்தில் போராளிகளின் போக்குவரத்து மற்றும் பயிற்சிகள் தொடரும். இந்தப் பிரதேசத்தில் எமது கலங்களை தடுத்தல், பரிசோதித்தல் போன்ற செயற்பாடுகளை ஸ்ரீ லங்கா கடற் படையினர் தவிர்க்கவேண்டும். இதை மீறி கடற் படையினரின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தால் அது மோதல் ஏற்பட வழிவகுக்கும்.

-இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே டெலிவ்சனிடம் தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை வந்த டெலிவ்சன், புலிகளின் அரசியல்துறை நடுவப்பணியகத்தில் தமிழ்ச்செல்வனை முற்பகல் 11.30 மணிக்குச் சந்தித்து இரு மணி நேரம் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

எமது கடற்பகுதியில் போராளிகள் போக்குவரத்து மற்றும் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். அந்தப் பகுதிக்குள் கடற்படையினர் சோதனை, தடுத்து நிறுத்தல் போன்ற அச்சுறுத்தற் செயற்பாடுகளைத் தவிர்க்கவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்தோம். கடற்படையினர் அச்சுறுத்தற செயற்பாடுகளில் ஈடுபடுவது மோதல் ஏற்பட வழிவகுக்கும். இந்த விடயம் பற்றி சரியான நடவடிக்கைளை கண்காணிப்புக் குழு மேற்கொள்ளவேண்டும்.

பரஸ்பரம் ஆள்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை இரு தரப்பினரும் நீடிக்க விடக்கூடாது. இந்தநிலை தொடர்ந்தால் நெருக்கடி, முறுகல் நிலை என்பன ஏற்படலாம். அத்தகையதொரு நிலை ஏற்படுவதைத தவிர்க்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஒரு தரப்பு ஒருவரைக் கைது செய்யும் போது ஏற்படும் யுத்த நிறுத்த மீறல் செயலை கண்காணிப்புக் குழு உடன்விசாரித்து அதற்கான தீர்வை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பொறுப்பை கண்காணிப்புக் குழு ஏற்கவேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் கொலைகள், கொள்ளைகள் போன்ற சம்பவங்களை நிறுத்தவேண்டியது, அந்தப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணு

(2 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படாத நிலையில்

## வடக்கு - கிழக்கு அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

கொழும்பு,ஜூன்14

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவது குறித்து தேர்தல் ஆணையாளர் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 10.30மணிக்கு வடக்கு - கிழக்கு அரச அதிபர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கிறார்.

எதிர்வரும் 25ஆம் திகதி இத்தேர்தல்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதாலேயே தேர்தல் திணைக்களம் அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களுக்கு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நியமனப்பத்திரங்களை ரத்துச் செய்துவிட்டு புதிதாக நியமனப் பத்திரங்களை கோர நடவடிக்கை எடுக்கபடுமென அரசு கூறியிருக்கிறது.

இதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், அச்சட்ட மூலத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு மருத்துவர் வேலைநிறுத்தம் இன்றும் நாளையும் இடைநிறுத்தம்

பொசன் நோன்மதி தினத்தை முன்னிட்டு இன்றும் நாளையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலைநிறுத்தத்தை இடைநிறுத்தி வைக்கும். மீண்டும் திங்கள் முதல் தீர்வு கிட்டும் வரை வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் குமார் வீரசேகர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 573 தொண்டர் ஆசிரியருக்கு வடக்கில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த 573 பேருக்கு எதிர்வரும்19ஆம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்பட உள்ளது.

நியமனம் பெறுபவர்களின் பட்டியல்கள் நேற்று அந்தந்த மாவட்டங்களின் வலயக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நியமனம் பெறுபவர்களுக்கான நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதிவுத்தபால் மூலம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் காணி அமைச்சர் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜூன்14.

யாழ் கரையோரப் பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்வது தொடர்பான பிரச்சினை குறித்து ஆராய பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ சகிதம் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

குருநகர், பாஷையூர் மற்றும் யாழ். கோட்டை, நாவாந்துறைப் பகுதிகளுக்கும் அமைச்சர் சென்று அங்கு மக்கள் மீள்குடியமர்வதில் உள்ள பாதுகாப்புப் பிரச்சினைகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சமாதான முயற்சி வெற்றிக்கு விசேட து ஆ பிரார்த்தனை

கல்முனை,ஜூன்14

சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டியும், வடக்கு முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை வலியுறுத்தியும் நேற்று வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல ஜும் ஆப் பள்ளிவாசல்களிலும் விசேட து ஆப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளி வாசல்கள் சம்மேளனம் விடுத்த வேண்டுகோளை ஏற்று பேஷ் இமாம்கள் இவ்விசேட து ஆப் பிரார்த்தனைகளை நடத்தினர்.

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, மாவடிப்பள்ளி, நற்பிட்டிமுனை, பொத்துவில் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் உள்ள ஜும் ஆப் பள்ளிவாசல்களிலும் இப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

## செவிப்புலன் வலுவிழந்தோருக்கு மருத்துவ முகாம்

கொக்குவில், கலட்டி, சீனியர் லேனில் இயங்கிவரும் செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை செவிப்புலன் வலுவிழந்தோருக்கான மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் இரத்த அழுத்தம், சலரோகம், குருதிச் சோகை உட்படப் பல் வேறு நோய்களுக்கு பரிசோதனை செய்யப்படும். (ஒ)

## யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் காலமானார்

யாழ்ப்பாணம்,ஜூன்14



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் அதிபர் வண.அன்ரனி ஏ. போல் அடிகளார் நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் இரசாயனவியல் மற்றும் கிறிஸ்தவ பாட ஆசிரியராகவும் உப அதிபராகவும் பணியாற்றிய இவர், பின்னர் அதிபர் பொறுப்பேற்றார். கல்லூரியின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், இறை போதகராகவும் இவர் சேவைபுரிந்தார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு நாளைமறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறும். நல்லடக்க ஆராதனை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபைப் போராலயத்தில் இடம்பெறும். (ஒ-185)

# 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு

## பல்கலை. மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்' என்ற மகுட வாசகத்துடன் எதிர்வரும் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு அனைத்துத் தரப்பினரதும் ஒருமித்த ஆதரவு கிட்டியுள்ளதாக யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பாக வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள், மாதர் சங்கங்கள், பாடசாலைகள், நலன்புரி நிலையங்கள், ஆலய நிர்வாகசபைகள் போன்றவற்றுடன் மக்கள் குடியிருப்புகளுக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சென்று கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தக் கலந்துரையாடல்களின் போது அனைத்துத் தரப்பினரும் 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும்- 'பொங்குதமிழ்' நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்வதாக உறுதியளித்துள்ளதாகவும் - அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, தென்மராட்சி, வலிமேற்கு, பல்கலைக்கழக பகுதிகளில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கான அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒலிபெருக்கிகள் மூலம் பொங்குதமிழ் பாடல்கள், கவிதைகள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக வாசல்கள்யாவும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு பதாதைகளும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன், பல்கலைக் கழக மாணவர்கள் விரிவுரைகளை நிறுத்தி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளதாகவும்- மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## பளையில் சிரமதானம்

தென்மராட்சி,ஜூன்14

சுற்றுச்சூழல் வாரத்தையொட்டி விடுதலைப் புலிகளின் பளைப் பிரதேச அரசியல் துறையினர் இன்று சனிக்கிழமை பளை நகரம் மற்றும் முகமாலை பஸ் தரிப்பிடம் ஆகிய இடங்களில் சிரமதானப் பணியினை மேற்கொள்ள உள்ளனர்.

இப்பகுதியில் சூழலை மாசடையச் செய்யும் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் உறைகள் ஆகியவை அப்புறப்படுத்தப்பட்டு அழிக்கப்படவுள்ளன.

இப்பணியில் இப்பகுதியில் உள்ள பொது அமைப்பினர், வணிகர் மன்றத்தினர் பச்சிலைப்பள்ளி [illegible] வாழ்வு அபிவிருத்தி நிலைய பளைப் பிரதேச சபையினர் போராளிகள் உட்பட பலர் கலந்துகொள்ளவிருப்பதாக பளை அரசியல் பொறுப்பாளர் தெரிவித்தார். (ஒ-117)

## வெள்ள அனர்த்தத்தில் சேதமுற்ற தேயிலை தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு

### வழங்க அமைச்சு தீர்மானம்

கொழும்பு,ஜூன்14

வெள்ளத்தினால் சேதமடைந்த தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதென பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

அண்மையில் தெற்கில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 17 தொழிற்சாலைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. மேலும் 4 தொழிற்சாலைகளுக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டன.

பெருந்தோட்ட கைத்தொழில அமைச்சர் லஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் காலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட தொழிற்சாலை உரிமையாளர்களைச் சந்தித்துப் பேசுகையிலேயே இது குறித்து தெரிவித்தார். (ஒ)

## அனுமதியின்றி மணல் எடுத்துச்சென்ற நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மணல் எடுத்துச்சென்ற ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டார்.

அரியாலையைச் சேர்ந்த செல்லையா நிக்ஷன் என்பவரே கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர் ஆவார்.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் மணல் எடுத்துச்சென்றமைக்காக குறிப்பிட்ட நபரை ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டுள்ள நீதிவான், மணலை யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் கட்டடப் பணிக்கென கையளிக்குமாறு பணித்துள்ளார். (ஒ-8)

## போராளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களின் பொறுப்பாகும். இத்தகைய செயல்கள் அங்கு அதிகரிப்பதற்கு அவர்களின் பலவீனம் தான் காரணம். தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களினதோ அல்லது வேறு பொதுமக்களினதோ கொலைகளுக்கு நாம பொறுப்பல்ல.

கண்காணிப்புக்குழுவின் ஒழுங்கு, நடைமுறைகள், ஆள்களை அதிகரித்தல், அதிகாரங்களை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து எம்மிடம் கண்காணிப்புக் குழுத்தலைவர் பிரஸ்தாபித்தார்.

கடல் நடமாட்டம் தொடர்பாக எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து ஆலோசனைகள், பரிந்துரைகளை அவர் தெரிவித்தார். அவை தொடர்பாக எமது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக் கூறினோம் - என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடொட்டிர், தலைமையக அதிகாரி ஹெயின்றிட்ஸ் ஆகியோரும் வந்திருந்தனர். (ஒ-3)

## அரியாலையில் விரைவில் புதிய பொலீஸ் நிலையம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

அரியாலைப்பகுதியில் பொலீஸ் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாம்பழம் சந்திப்பகுதியில் முன்னர் அமைந்திருந்த பொலீஸ் நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அதிலிருந்து அகற்றப்பட்டது.

தற்போது மீண்டும் அப்பகுதியில் பொலீஸ் நிலையம் அமைப்பதன் மூலம் இப்பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## மின்சார சபை ஊழியர்கள் திங்களன்று வேலை நிறுத்தம்

கொழும்பு,ஜூன்14

இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த 24 தொழிற்சங்கங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்திருக்கின்றன. சம்பள உயர்வு உட்பட மூன்று கோரிக்கைகளை அவை முன்வைத்திருக்கின்றன.

திங்கட்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை வேலை நிறுத்தம் நடைபெறும். அலுவலக நடவடிக்கைகள், மின்கட்டணங்களை ஏற்றுக்கொள்ளுதல், பழுதுபார்த்தல் போன்றவை நடைபெறமாட்டா என்று தொழிற்சங்கங்களின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## வெண்கல விக்கிரகங்கள் திருட்டு!

தென்மராட்சி,ஜூன14

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் பிள்ளையார் ஆலய விக்கிரகங்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆலயக் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள், அங்கிருந்த அனைத்து வெண்கல விக்கிரகங்களையும் திருடிச் சென்றுள்ளதாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இவ் ஆலயம், புனரமைக்கப்பட்டு கடந்த மார்ச் மாதம் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட போது வெண்கல விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# அரசாங்கத்தின் யோசனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்பு என்ற பெயரில் - புலிகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் கூடிய - நிர்வாக முறைமை ஒன்றை வடக்கு - கிழக்குக்குத் தரத் தாம் தயார் என்று டோக்கியோ கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி தெளிவான விளக்கங்கள் ஏதும் இல்லாத நிலையில் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று விடுதலைப் புலிகள் தெளிவுபடக் கூறிவிட்டனர்.

இந்தப் பின்னணியிலேயே பிரதமரின் உத்தேச யோசனை குறித்து விளக்கக் குறிப்பு ஒன்றை அனுப்புவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

டோக்கியோ மாநாட்டில் சட்ட விடயங்கள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு உதவுவதற்காக டோக்கியோ சென்றிருந்த சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் நேற்று முன்தினம் இரவு கொழும்பு திரும்பினார்.

பிரதமர் அறிவித்துள்ள உத்தேச நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து சட்ட அம்சங்களுடன் கூடிய சிறிய வரைவு ஒன்றைத் தயாரிப்பதில் நேற்று முதல் அரசு [illegible] என அரசுத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜப்பான் மாநாட்டை முடித்துக் கொண்டு வேறு ஒரு நாட்டுக்குச் சென்றுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இரண்டொரு நாள்களில் கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர் கொழும்பு திரும்பியதும் பிரதமரின் உத்தேச யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்படவிருக்கும் விளக்கக் குறிப்பு இறுதி செய்யப்படும் என விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும், பிரதமரின் உத்தேச நிர்வாகக் கட்டமைப்பும் அது தொடர்பான விளக்கக் குறிப்பும் பின்வரும் அடிப்படைகளையே கொண்டிருக்கும் என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

★ அரசமைப்புக்கு உட்பட்ட ஏற்பாடாகவே அது இருக்கும். அரசமைப்பை அது நேரடியாக மீறாமல் இருப்பது உறுதி செய்யப்படும்.

அந்த ஏற்பாடுகளில் புலிகளுக்கு வழங்கப்படும். அதிகாரங்கள் மற்றும் பங்கு, பணிகள் குறித்து இப்போது புலிகளுக்கு அனுப்பப்படவிருக்கும் விளக்கக்குறிப்பில் திட்டவட்டமான விவரங்கள் இருக்கமாட்டா. மேலோட்டமாக சில அம்சங்கள் மட்டுமே குறிப்பிடப்படும். மேலதிக விடயங்களை நேரடிப் பேச்சின்போது கலந்து பேசி முடிவுசெய்ய அரசு விரும்புகின்றது என்பது அதில் வெளிப்படுத்தப்படும்.

★ வடக்கு - கிழக்கு நிர்வாகக் கட்டமைப்புப் பொறுப்பை பிரதமர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க தானே ஏற்றுக்கொண்டு அதை நிர்வகிக்க உயர் சபை (Apex Body) போன்ற ஒன்றைத் தாமே நியமிப்பார், அதில் புலிகளுக்கு அதிகளவு பங்களிப்பு வழங்கப்படும், இதுவே பிரதமரின் புதிய திட்டம் என்று கூறப்படுகின்றது.

இந்தவகையில் பார்த்தால் புலிகள் பங்குபற்றுவதற்கு அரசுத் தரப்பினால் முன்வைக்கப்படும் கட்டமைப்பு - மகாவலி அபிவிருத்தி அதிகார சபை போன்ற - ஓர் அதிகாரசபையாகவே கருதப்பட முடியும் என்று சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசியல் அதிகாரமற்ற அத்தகைய ஒன்றை - இவ்வளவு, இழுபறிகள், போராட்டங்களுக்குப் பின்னர் புலிகள் ஏற்றுக் கொள்வார்களா என்றும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வடக்கு- கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு போன்ற ஒன்றை வழங்கப் போவதாக டோக்கியோ மாநாட்டு அறிவிப்பு மூலம் பெரிய மாயையை காட்டிக்கொண்ட அரசுத் தரப்பு, அதனை எழுத்தில் விவரமாக விளக்கப் பின்னடிப்பதாகக் கூறப்படுகின்றது.

பேச்சு மேசையில் விவரத்தை வெளியிட்டு, கலந்துபேசி பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற சாரப்பட கருத்துக்களை முன்வைத்து வருகின்றது அது. தான் புதிதாக எதனையும் புலிகளுக்கு வழங்க (Offer) முன்வராமலேயே புலிகளை பேச்சு மேசைக்கு மீண்டும் இழுத்து வந்து வீழ்த்திவிடவேண்டும் என்பதில் அரசுத் தரப்பு மும்முரமாக இருந்து வருகின்றது.

இத்தகையநிலையில் -

பிரதமரின் புதிய யோசனை குறித்து எழுத்தில் திட்ட வட்டமான வரையறைகளுடன் கூடிய ஏற்பாடுகள் இல்லாத நிலையில் அதனை ஆராய்வதற்கு புலிகள் பச்சைக்கொடி காட்டுவார்களா என்பது கேள்விக்குறியே என அந்த வட்டாரங்கள் மேலும் சுட்டிக் காட்டுகின்றன.

## தேர்தல் ஆணையாளரின் மனு 5 நீதியரசர்கள் முன் விசாரணை

### நேற்றைய விசாரணையில் நீதிமன்றம் தீர்மானம்

கொழும்பு ஜூன்14

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனு ஐந்து நீதியரசர்கள் கொண்ட நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இம்மனு நேற்று நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழுவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் 19ஆம் திகதி அந்த விசாரணை நடைபெறும்.

திருத்தியமைக்கப்பட்ட மனு ஒன்றை அன்று நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு மனுதாரர் தரப்பு சட்டத்தரணியை நீதிமன்றம் பணித்தது.

மனுதாரர் தரப்பு சட்டதத்ரணி எல்மோ பெரேரா நீதிமன்றத்தில் கருத்துத் தெரிவிக்கையில்:-

17ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மனுதாரர் ஓய்வுபெறமுடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அத்திருத்தச் சட்டதின்படி, தேர்தல் ஆணைக் குழுவுக்கு ஜனாதிபதி உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். ஆயினும், அந்த நியமனங்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மனுதாரர் ஆணையாளர் பதவியில் தொடர்ந்து கடமையாற்ற வேண்டியவராக இருக்கின்றார். இருதய நோயாளியான அவருக்கு இதனால் அநீதி நேர்ந்துள்ளது - என்றார்.

## நீர்கொழும்பில் கைதிகள் தப்பிச்செல்ல இரு சிறைக்காவலர்களே காரணம்

### விசாரணையை அடுத்து தற்காலிக வேலை நீக்கம்

நீர்கொழும்பு சிறையிலிருந்து கைதிகள் தப்பியோடிய சம்பவம் தொடர்பாக சிறைச்சாலையின் இரு காவலர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். சிறையிலிருந்து தப்பியோடிய நான்கு கைதிகள் மீது சிறைக் காவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் கைது செய்யப்பட்டார்; இருவர் தப்பியோடி விட்டனர். தப்பியோடிய இரு கைதிகளும் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

இச்சம்பவம் குறித்து உதவி சிறை ஆணையாளர் ஒருவரின் உத்தரவின் பேரில் விசாரணை நடத்தப்பட்டது. கைதிகளின் சிறைக்குப் பொறுப்பாக இருந்த காவலரும் வெளியே பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த காவலரும் தமது கடமையை உரியவாறு நிறைவேற்றாததே கைதிகள் தப்பிச் செல்வதற்குக் காரணங்களாக இருந்துள்ளன என்று தெரியவந்துள்ளது.

# சதாம் ஆதரவுப் படையுடன் ஈராக்கில் அமெரிக்க இராணுவம் கடும் சண்டை

## 70பேர் பலியானதாக அறிவிப்பு!


**ஈராக்கில் சதாம் ஆரவுப் படையினருக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையே கடும் சண்டை இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பக்தாத்துக்கு வடக்கே உள்ள "தீவிரவாதி"களின் முகாம் ஒன்றின் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து இந்தச் சண்டை மூண்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதில் 70 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாக 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது. பதிலுக்கு ஓர் அமெரிக்கச் சிப்பாய் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

வியாழனன்று காலையில் வான் தாக்குதல்களுடன் இந்தத் தாக்குதல் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து தரையில் இரு தரப்பினருக்கும் இடையில் சண்டைகள் ஆரம்பமாகின. பக்தாத்தின் வடமேற்கே 150 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்த ஈராக்கியப் படையினரின் நிலை மீதே அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சதாமின் பாத் கட்சி உறுப்பினர்களே அமெரிக்கப் படையினருடன் சண்டையில் ஈடுபட்டுள்ளதாக ஈராக்கில் உள்ள அமெரிக்க மூத்த அதிகாரி போல் பிறிமர் கூறினார். ஆனால், அங்குள்ளவர்களில் பாத் கட்சி உறுப்பினர்கள், சதாமின் குடியரசுப் படையினர் மற்றும் அமெரிக்கர்களுக்கு எதிரான குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வியாழனன்று நடந்தது உக்கிரமான போர் என்று அமெரிக்க விமானப் படை ஜெனரல் ரிச்சட் மேயர் தெரிவித்தார். "அது மிகக் கடுமையான சண்டை. அவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அமெரிக்கப் படையினருககு எதிராகத் திறம்படப் போராடினார்கள்" - என்றார் அவர்.

ஈராக்கை அமெரிக்கப் படையினர் கைப்பற்றிய பின்னர், மே மாதத்தில் இருந்து இதுவரை 40 அமெரிக்கப் படையினர் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



பக்தாத்தில் ரோந்து சுற்றும் அமெ. படையினர்

## லைபீரிய சமாதானப் பேச்சுகள் கானா நாட்டில் தொடர்கின்றன

அசோக்கொம்போ,ஜூன்14

நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் லைபீரியாவின் உள்நாட்டுப் போருக்கு முடிவுகட்டுவதற்கான சமாதானப் பேச்சுக்கள் கனா நாட்டில் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்றது. ஆனாலும் கிளர்ச்சியாளர்கள் தமது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி இணக்கம் ஒன்றுக்கு வருவதாகத் தெரியவில்லை.

கானா நாட்டுத் தலைநகரில் இருந்து 100 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அக்கசோமோ என்ற இடத்தில் இந்த சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் அரசாங்கப் பிரதிநிதிகள், இரு கிளர்ச்சிக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் லைபீரிய அரசியல் கட்சிகள் 18இன் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

பிரதான கிளர்ச்சிக் குழுவான ஜனநாயகம் மற்றும் மீளமைப்புக்கான ஐக்கிய லைபீரியக் குழுவுக்கும் நாட்டின் அதிபர் சார்ள்ஸ் ரெய்லருக்கும் இடையில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றை செய்து கொள்வதற்கு புதனன்று கொள்கையளவில் இணங்கிக் கொண்டார்கள். அதனைத் தொடர்ந்தே கானா நாட்டில் இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகின.

நாட்டின் பெரும்பாலான பகுதிகள் தற்போது கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கின்றது. நாட்டின் தலைநகர எல்லை வரை அவர்கள் முன்னேறி விட்டார்கள். இதனால், அவர்கள் தமது நிலைப்பாட்டில் இறுக்கமாக இருக்கின்றார்கள்.

எனினும், இருதரப்பினரும் தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் அடுத்த வாரம் கையெழுத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## கம்போடியாவில் பொலீஸார் சுட்டு ஒருவர் பலி!

பொனம் பென்த்,ஜூன்14

கம்போடியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் மீது பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தது ஒருவர் பலியானார்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக ஆகாயத்தை நோக்கித் துபபாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டி இருந்தது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு நாள்களாகவே ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், நேற்று இவர்கள் ஊர்வலமாக நகரின் மையப் பகுதிக்குள் நுழைய முயன்ற போது பொலீஸார் அதனைத் தடைசெய்ய முயன்றனர். அப்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸாரை நோக்கி கற்களை வீசினர். இதனால் பொலீஸார் உண்மையான துப்பாக்கிக் குண்டுகளைப் பயன்படுத்தி சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. (ம)

## சேர்பியாவில் பொலீஸார் பொதுமக்கள் மோதல்!

பெல்கிரேட்,ஜூன்14

நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த பேர்க்காலக் குற்றவாளியான முன்னாள் யுகோஸ்லாவிய இராணுவக் கேணல் வெஸ்லின் சல்ஜிவன்கனின் சேர்பிய விசேட படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

சேர்பியத் தலைநகர் பெல்கிரேட்டில் இவரது வீட்டின் முன்பாக மேற்கொள்ளப்பட்ட 10மணி நேர தீவிர கண்காணிப்பின் பின்னர் இவர் படையினரால் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்படுவதை எதிர்த்து அங்கு



திரண்ட அவரது ஆதரவாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. அவர்கள் பொலீஸாரைத் தாகினர். இதனைத் தடுக்க துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளவேண்டியிருந்தது.

இந்தக் கலவரத்தில் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. வெஸ்லினின் ஆதரவாளர்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலையும், சத்தக் கிரனேட் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். 1991ஆம் ஆண்டு குரோஷியாவில் 200 பொதுமக்கள் ஒன்றாகக் கொலை செய்யப்பட்டதற்கு இவரே காரணம் என்று இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதற்காகவே இவர் சர்வதேச நீதிமன்றத்தால் போர்க்காலக் குற்றவாளியாகத் தேடப்பட்டுவந்தார். யுகோஸ்லாவிய தலைவர் சொலபோடன் மிலோசவிக் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பதவியில் இருந்து நேட்டோ கூட்டணியால் அகற்றப்பட்டதிலிருந்து வெஸ்லின் தலை மறைவாக வாழ்ந்து வந்தார்.(ம)

## ஈரானிய அரசுக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




பேராட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள்

தெஹ்ரான்,ஜூன்14

ஈரானில் அரசுக்கு எதிராக கடந்த மூன்று நாள்களாக பல்கலைக்கழக மாணவர்கள் இரவு நேரத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

இஸ்லாமிய அடிப்படைவாத அரசுக்கு எதிரானவர்கள் தடைகளையும் மீறி இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். எனினும் மூன்றாவது நாளான நேற்று போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் நூற்றுக் கணக்கானோர் வளாகக் கதவுகளை அடித்து நொறுக்கிக் கொண்டு வீதிக்கு வந்து மெழுகுதிரிகளைக் கைகளில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அடிப்படைவாத இஸ்லாமிய அரசுக்கு எதிரான சுலோகங்களை எழுப்பியவாறு பொலீஸாரை நோக்கி கற்களை எறிந்தார்கள். நாட்டின் அதியுயர் தலைவர் ஆயத்துல்லா கொமேனியை பதவியில் இருந்து விலகுமாறு கோரியே அவர்கள் பெருமெடுப்பில் கோஷங்களை எழுப்பினர்.

மாணவர்களைக் கலைப்பதற்காகப் பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். இதனை எதிர்த்து பல்கலைக்கழகத்துக்குள் மாணவர்கள் தீ மூட்டினர். மாணவர்களின் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்கலை வளாகத்துக்கு அருகில் இருக்கும் வாகனத் தரிப்பிடத்தில் நின்ற வாகனச் சாரதிகள் அனைவரும் ஒரே நேரத்தில் ஹாரன் ஒலிகளை எழுப்பினர். (ம)



காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை ஒன்றின் பால்குடிக்கும் போத்தலை உயர்த்திப் பிடித்தபடி இஸ்ரேலியர்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்பும் அத்திரமுற்ற பலஸ்தீனர்கள்.

### சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல் எனக்கூறி

## ஹமாஸ் அமைப்பை ஒழிக்க இஸ்ரேல் தீவிர நடவடிக்கை

### அமெரிக்காவும் அதற்கு உதவும்

ஜெருசலேம்,ஜூன்14

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் சமாதானத் திட்டத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஹமாஸ் இயக்கத்தை அமெரிக்காவின் பலமான உதவியுடன ஒழித்துக்கட்டுவதற்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது.

இந்த வார இறுதியில் அமெரிக்க அதிகாரிகள் குழு ஒன்று மத்திய கிழக்குக்கு வருகைதர இருக்கின்றது. அமெரிக்காவின் பின்னணியுடனான சமாதானத் திட்டத்தை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து அவர்கள் ஆராய்வர்.

எதிர்வரும் 22ஆம் திகதி அவர்கள் இஸ்ரேல் - பலஸ்தீன அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் ஜோர்டானில் பேச்சுநடத்துவார்கள்.

அமெரிக்கப் பின்னணியுடனான மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை ஹமாஸ் இயக்கம் ஏற்க மறுத்துள்ளது. இதனையடுத்து மத்தியகிழக்கில் வன்முறைகள் தொடர்ந்து வருகின்றன. இவை தடுத்து நிறுத்தப்படாத வரைக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத நிலை இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனாலேயே ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளது. ஜோர்டான் வரும் அமெரிக்க அதிகாரிகள் இந்த வன்முறைகளை எப்படி நிறுத்துவது என்பது குறித்து இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேசுவார்கள்.

அதேசமயம், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலியப் பகுதிக்குள் நடத்திவரும் தற்கொலைத் தாக்குதல்களுக்கு எதிராகத் தாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும் என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. தற்கொலைத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளாக இருக்கும் ஹமாஸ் தலைவர்களைத் தாம் நிச்சயம் அழித்தே தீருவோம் என்றும் இராணுவம் கூறியுள்ளது.

ஹமாஸ் தீவிரவாதிகளை அடியோடு அழிக்கும் திட்டம் தம்மிடம் ஏற்கனவே இருந்ததாகக் கூறும் இஸரேல், சமாதானத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டதாகவும் கூறுகின்றது. ஆனால், இனிமேல் பொறுக்கப்போவதில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை -

மத்தியகிழக்கில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கதுடன் சர்வதேச சமாதானப் படை ஒன்றை அங்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று ஐநா. பொதுச் செயலர் கோபி அனான் கூறியுள்ளார். (ம)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
21 - 06 - 1926



மறைவு
15 - 05 - 2003

### திருமதி
### விஜயலட்சுமி சபாரத்தினம்

**இன்று (14.06.2003) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**எமது அன்னையின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து சகல விதத்திலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள், சகோதரங்கள்,
மைத்துனர், மைத்துனிமார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*இல.34, 4ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (19093)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
20 - 11 - 1937



உதிர்வு
05 - 06 - 2001

அமரர்
### சிவசம்பு சிவயோகேஸ்வரன்

*(ஓய்வுபெற்ற பிரதிப் பிரதம தபால் அதிபர்)*
**திதி:14.06.2003**

**ஈராண்டுகள் சென்று மறைந்தாலும்**
**இதயத்தில் உங்கள் நினைவுகள்**
**எம்முடன் என்றும் நிலைத்து நிற்கும்.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*முருகன் வீதி,*
*உரும்பிராய்.* (19087)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 - 06 - 1908



மறைவு
10 - 06 - 1998

### அமரர் குமாரசாமி கந்தவனம்

(நெல்லியடியின் முதல் வர்த்தக ஸ்தாபகர், முன்னாள் பிரபல வர்த்தகர்)
திதி: 14-06-2003

ஆறுமுகன் அடிபற்றி காலம் காலம்
அருளமுதம் வேண்டி அவன் புகழ்பாடி
ஊறுகளை சீலன் வடிவேலன் நாமம்
உச்சரித்தே பிறவிக்கடல் தாண்ட என்றும்
மாறுபடா மனத்தினனாய் மண்ணில் வாழ்ந்து
மரணித்தார் இறை பற்றி பயனுற்றார்
ஊறும் அன்பை ஊட்டியவர் பிரிந்த காலம்
உருண்டு ஓடி ஐந்தாய் ஆனதின்றே!

*விண்மீன் அங்காடி,*
*குமாரசாமி கந்தவனம் பில்டிங்,*
*பிரதான வீதி, நெல்லியடி.* (19100) - குடும்பத்தினர்.

## மூக்குக் கண்ணாடி வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,ஜூன்14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கடந்தமாதம் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் கண் பரிசோதனையின்போது மூக்குக் கண்ணாடி வழங்க சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகவும் -

மூக்குக் கண்ணாடி பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கழகச்செயலாளர் லயன் கா. சற்குணதேவன் தெரிவித்துள்ளார். (எ-117)

## கொழும்புத்துறை கிழக்குக்கு இதுவரை மின்விநியோகம் இல்லை

யாழ்ப்பாணம்,ஜூன்14

கொழும்புத்துறையின் கிழக்குப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால், மேற்படி பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் இரவு வேளைகளில் கல்வி, போக்குவரத்து ஆகியவற்றில் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தசூழலால் பெரும் அழிவுகளைச் சந்தித்த மேற்படி பகுதியில் பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் கற்குவியல்கள், பற்றைகளுக்குள் பீதியுடன் வாழ்க்கை நடத்த வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-ரி)

## சிமெந்துத் திருட்டு; நால்வருக்கும் பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ்.பல்கலைக்கழக விடுதிக் கட்டடப் பணிகளுக்கென களஞ்சியப் படுத்திவைக்கப்பட்டிருந்த சிமெந்து பக்கெட்டுக்களைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டிக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வரும் கடந்த புதன்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சிமெந்துப் பக்கெட்டுக்களைத் திருடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நாகரத்தினம் நவரத்தினராசா, அருணகிரிநாதன் மணிமகுலன் ஆகிய இருவரையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணை மற்றும் தலா 3 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் -

லான்ட் மாஸ்டர் சாரதியான கரோலிஸ் சில்வா மற்றும் காவலாளியான கந்தசாமி ஆகிய இருவரையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்ல யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அனுமதித்தார். (ம-8)

## அனலைதீவில் திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்14

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் வைகாசி மாத பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் திருமுறைப்பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் அனலைதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி (ஆச்சி கோவில் )அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பன்னிரு திருமுறை நூல்களுக்குச் சோடசோபசார பூசை, அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம், திருமுறை இசைவல்லார் கௌரவிப்பு, தேவாரப் பண்ணிசை,சொற்பொழிவு என்பன திருமுறைப் பெருவிழாவின் முக்கிய நிகழ்வுகளாக இடம்பெறும்.

பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்தப் பெருவிழாவில் சொற்பொழிவாளர்கள், பண்ணிசையாளர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர். (எ)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
23 - 07 - 1940



இறப்பு
17 - 05 - 2000

### அமரர் சபாபதி திருநாவுக்கரசு

**(முன்னாள் அதிபர், யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை,**
**யா/நல்லூர் சாதனா சி.சி.த.க.பாடசாலை)**
**திதி - 14.06.2003**

**ஆண்டுகள் மூன்றென்ன நூறானாலும்**
**எம் உயிருள்ள வரை**
**உங்கள் நினைவுகள் மாறாது**
**எம் நெஞ்சங்களிலிருந்து.**

நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

*1/5, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (19084)


**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்**


மிதிவெடி மற்றும் வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (**AROD**) எண்ணியுள்ளது. இதன் மூன்றாம் கட்டமாக தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் - நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 16, 17, 18ஆம் திகதிகளில் காலை 10.00 - 3.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்புகொள்ளவும்.

உங்கள் தொடர்புகளுக்கு:

நடமாடும் பிரிவு
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்
**மே/பா Dr.சண்முகராசா**
பழைய பொலீஸ் நிலைய வீதி,
(பிரதேச செயலகம் அருகில்) சாவகச்சேரி.

(சீ-28395)


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**14.06.2003**

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த
திரு.திருமதி செல்வராஜ் - ரஞ்சினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### டிலக்ஷன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (14.06.2003) சனிக்கிழமை அன்பு அண்ணன் டசிகரனோடு இணைந்து தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

HAPPY BIRTHDAY

செல்வன் டிலக்ஷனை பாசமிகு ஐயா (ஜெடா), அம்மா, டசிகரன் அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, சஜீ அத்தான், மலிஸ்ரா மச்சாள், பெரிய சித்தப்பா, கிருஷ்ணா சித்தி, அபி அக்கா, மது அக்கா (இந்தியா), குட்டிச்சித்தப்பா, வதனாச் சித்தி (சுவிஸ்), பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார் நிசாந்தன், சரவணன், சித்தப்பா, வதனிச் சித்தி, லக்ஷ்மென் அண்ணா, பகீரதி அக்கா, குட்டிச் சித்தப்பா, சுவர்ணாச் சித்தி, பிரவீன் குட்டி (ஆஸ்திரேலியா), பிறேமிளாச் சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றோம்.

**திரு.செல்வராஜ் குடும்பத்தினர்.**

*வல்வெட்டித்துறை.* (18932)

உதயன்

# உருக்குப் போன்ற உறுதி!

இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ கூட்டம் 'மணமகள்' இல்லாத திருமண விழாவாக - 'வெகு விமரிசையாக' - நடந்தேறிவிட்டது.

இனி என்ன? - இதுதான் பலரின் மனதிலும் எழும் கேள்வி.

ஸ்தம்பித்திருக்கும் சமாதான முயற்சிகள் நிரந்தரமாகத் தடைப்பட்டுப்போகுமா? - இது பலரது மனதையும் சஞ்சலப்படுத்தும் சந்தேகம்.

உதவும் நாடுகள் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட உதவு தொகையை பெரிய ஆரவாரமாகக் காட்டி அரசியல் லாபம் தேடும் திருவிழாவை நடத்துகின்றது அரசு. ஐ.தே.முன்னணி அரசினதும் தெற்கு ஊடகங்களினதும் இந்த ஆரவார நம்பிக்கை நிலைக்குமா அல்லது தகருமா என்பதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

இலங்கை அரசுகூட எதிர்பார்த்திராத இந்தளவு தொகையை உதவும் நாடுகள் அறிவித்தது எங்ஙனம்?

அதை அறிவதற்கு -

சமாதான முயற்சிகள் தொடர்பான ரணில் அரசின் நிலைப்பாடு குறித்து கடந்த 30ஆம் திகதி பிரதமர் ரணிலுக்கு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் வரைந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களை நாம் கவனிக்கவேண்டும்.

தமிழரின் உரிமைக்கான போராட்டத்துக்கு எதிராக சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றை விரிக்கின்றது இலங்கை அரசு என்ற சாரப்பட அந்தக் கடிதத்தில் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருந்தார் மதியுரைஞர் பாலசிங்கம்.

அந்த வலைப்பின்னலின் ஒரு வடிவம்தான் - ஒரு கட்டம்தான் - உதவும் நாடுகள் கூட்டம் என்பதை தமது உளவுத் தகவல்கள் மூலம் புலிகள் புரிந்து கொண்டதன் பின்னணியிலேயே புலிகளின் தற்போதைய நோக்கையும் போக்கையும் தமிழர்கள் கணிப்பிடவேண்டும்.

அந்த வலைப்பின்னலில் வசமாகப் புலிகளை மாட்டி வைக்கும் ஒரு சந்தர்ப்பமாக உதவும் நாடுகள் கூட்டத்தை பயன்படுத்துவதற்குக் காத்திருந்த பல 'சர்வதேச சக்திகளுக்கு' புலிகளின் சமயோசித நடவடிக்கை எதிர்பாராத ஒரு பதிலடி.

உதவும் நாடுகள் கூட்டத்துக்குப் புலிகளைக் கூட்டி வந்து சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு இதுதான் என்ற பெயரில் தங்களின் விருப்பு - வெறுப்பை தமிழர் தரப்பு மீது கட்டியடித்து, அதனை ஓர் அழுத்தமாகப் பிரயோகிக்க அந்தச் சக்திகள் திட்டம் போட்டன. தமிழர் தரப்புக்கு நியாயமானதை வழங்க மறுக்கும் தனது 'பரவணி'ப் போக்கிலிருந்து மாறாத இலங்கை அரசுத் தரப்பும் அந்தத் திட்டத்துக்கு வசதியான களத்தை ஏற்படுத்திக் கொடுத்து உதவ...., அனுசரணையாளர் பெயரில் வந்தோர் ஒத்து ஊத.... ஆக எல்லாமே கனகச்சிதமாகத்தான் நடந்தன.

ஆனால், புலிகளின் இராஜதந்திர நகர்வு, அந்த வலைப்பின்னலில் சிக்காமல் அவர்களை நழுவ வைத்துவிட்டது. தமது இந்த நகர்வு ஊடாகப் புலிகள் சாதித்தவை இரண்டு.

ஒன்று - தமிழரின் நியாயமான போராட்டத்துக்கு எதிரான - ஒருதலைப்பட்ச - அழுத்தத்துக்கு வாய்ப்புக் கொடுக்காமல் தவிர்த்துக்கொண்டது.

மற்றது - அத்தகைய அழுத்தத்தைத் தமிழர் தரப்பு மீது போடுவதற்கு உரிய - நியாயப்படுத்தக்கூடிய - நிலையில் இலங்கை அரசுத் தரப்பு இல்லை; அது தமிழர்களுக்கு நியாயமான அடிப்படைகளைக் கூட வழங்கக்கூடிய நிலையில் இல்லை என்பதை சர்வதேச உலகுக்கு அம்பலப்படுத்தியமை.

இந்த இரண்டு விதங்களில் புலிகள் வென்றாலும், தங்கள் வலையில் புலிகள் சிக்காமல் இராஜதந்திரமாக நடந்துகொண்டதால் சம்பந்தப்பட்ட சர்வதேச சக்திகளின் விசனத்துக்கும், மனக்குமுறலுக்கும், வெளியே தெரியாத உட்சீற்றத்துக்கும் அவர்கள் உள்ளானார்கள் என்பதும் மறுக்கப்பட முடியாததே.

புலிகளுக்கு எதிரான விசனத்தின் - சீற்றத்தின் - விளைவே, எதிர்பாராத இந்த உதவு தொகை பற்றிய அறிவிப்பு.

இந்த நிகழ்வுகளின் பின்னணியில் இரண்டு விடயங்கள் நோக்கப்பட வேண்டியவை.

ஒன்று - தமிழர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான புலிகளை - அவர்களின் நியாயமான உரிமைப் போரை - எந்த சர்வதேச சக்திகளாலும், அழுத்தங்களாலும் - பெரும் தொகை நிதியை ஆசையாகக் காட்டிக்கூட - இலகுவில் அடிபணிய வைத்துவிட முடியாது. உறுதியில் உருக்குப் போன்றவர்கள் அவர்கள். இந்திய அமைதிப்படையின் காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட அந்த உறுதி இப்போது மீண்டும் சர்வதேச உலகுக்கு உணர்த்தப்பட்டிருக்கின்றன.

மற்றது - புலிகளின் நியாயமான பங்களிப்பு - காத்திரமான பங்குபற்றல் - இல்லாமல் இலங்கையில் புனரமைப்போ, அபிவிருத்தியோ சாத்தியப்படாது - எந்தப் பெரிய தொகை உதவியாக வழங்கப்பட்டாலும்.

புலிகளுக்கு எதிராக வலைவிரித்து, 'கோட்டை'வட்டவர்களின்' மனதை இப்போது குடைந்துக்கொண்டிருக்கும் விடயங்கள் இந்த இரண்டும் தாம்.

தென்மராட்சியில்

# உலக வங்கியின் உதவியுடன் குளங்கள், வீதிகள் புனரமைப்பு

தென்மராட்சி,ஜூன்14

உலக வங்கியின் உலர் உணவுத்திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து குளங்களும், எட்டு வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வேலைகள் அந்தந்த கிராம மக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வேலையாள்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரணி இயற்றாலைக்குளம், நுணாவில்குளம், மிருசுவில் பழைய வாய்க்கால் குளம், சரசாலை மாதுளாய் குளம், ஓதை அணைக்கட்டுக்குளம் ஆகியனவும் -

தம்புதோட்ட வீதி, கொடிகாமம் நாவலடி ஐயன் கோவிலடி வீதி, கெற்பேலி - பாலாவி வீதி, தவசிகுளம் ஊரெல்லை வீதி, வரணி நாவற்காடு கிராமிய அபிவிருத்திச் சங்க வீதி, மிருசுவில் ஊரெல்லை வீதி, திலீபன்நகர் வீதி, வரணி இயற்றாலை வீதி ஆகியனவே மேற்படி திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேச செயலகம், கமநல சேவைகள் நிலையம், சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் மூலம் இவ்வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(எ-117)

## நாட்டு நடப்பு

### மாமியும் மருகரும்

பேதை ஒருத்தி சென்று
பெருமனை முன்னே நின்று
ஆதரவு அற்ற எனக்கு
அருளுக பிச்சை என்ன
மாதரசி அந்த மாமியாரும்
மனையை விட்டு ஓடு என்றாள்
பாதகி சொல்லைக் கேட்டு
பையவே அவளும் ஓட
ஏதையே! உள்ளே வா!
என் இயம்பிய மருமகனும்
பேதையே இது என் வீடு
போடி நீ! வெளியே என்றான்
ஆதரவு அற்ற மாது
அழுதுகொண்டோடலுற்றாள்
மாதரசி எங்கள் அம்மை
மறுத்தெமை விரட்டி ஓட்ட
பாதகம் செய்யேன் என்ற
பிரதமருமே விரட்டுவாரோ?

- விகடகவி.

# காணாமற்போனோர் தொடர்பாக செஞ்சிலுவைக்குழு விசாரணை

## அதன் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜூன்14

1990ஆம் ஆண்டின் பின்னர் காணாமற்போனவர்களைத் தேடும் விசாரணைகளை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆரம்பித்துள்ளது.



செயதியாளர் மாநாட்டில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிலிப்பா நடோ மார்க்கஸ்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பிலிப்பா நடோ மார்க்கஸ் இதனைத் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார்.

ஜேர்மன் தலைநகர் பேர்லினில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் பெப்ரவரி மாதம் 7ஆம்,8ஆம் திகதிகளில் இடம்பெற்ற அரசு - புலிகள் இடையிலான ஐந்தாம் கட்டப் பேச்சுக்களின் முடிவில் காணாமற்போனவர்களை தேடும் பணியில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையிலேயே தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் மார்க்கஸ் கூறினார்.

"இனப்பிரச்சினை ஆரம்பித்த காலம் முதல் இலங்கையில் 20ஆயிரம் பேர் காணாமற்போயுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் 1990ஆம் ஆண்டின் பின்னரே காணாமற்போயுள்ளனர். இவர்களைத் தேடுவதில் அரசு - புலிகள் இரு தரப்பினரும் உதவிகளை வழங்கவுள்ளனர்.

"காணாமற்போனவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் இருந்து நாம் தகவல்களைப் பெற்றுவருகின்றோம். சிலர் எங்கு கைதானார்கள் என்று நாம் கண்டறிந்துள்ளோம்; சிலர் இன்னும் தடை முகாம்களில் இருக்கிறார்கள்; காணாமற்போனவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர்; இவை தவிர எமக்கு வேறு தகவல்கள் கிடைக்கவில்லை.

"இந்த விசாரணைகள் குறித்து விடுக்கப்பட்ட ஆரம்பக் கோரிக்கையைத் தொடர்ந்து நாம் இதனைச் செய்துள்ளோம். இந்த விடயத்தில் இருதரப்பும் இதுவரை எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை அவர்கள் வேண்டிக்கேட்டுக்கொண்டால் நாம் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்துவோம் - என்று மார்க்கஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# கல், மணல் தட்டுப்பாடு காரணமாக வீதி புனரமைப்புப் பணிகள் தாமதம்

## வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். குடாநாட்டில் கல் மற்றும் மணல் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், குடாநாட்டு வீதிகளைப் புனரமைப்பதில் தாமதநிலை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.சிவநேசராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டின் பல முக்கிய வீதிகளில் யாழ். ரெலிகொம் நிறுவனத்தினால் தொலைபேசி இணைப்புகளைப் பொருத்துவதற்கு தோண்டப்பட்ட குழிகள் சில இதுவரை சீர்செய்யப்படவில்லை. இது விடயமாக தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகள் எமது அதிகார சபையின் நிர்வாகத்துக்குட்பட்டவை. ரெலிகொம் நிறுவனம் தமது தொலைபேசி இணைப்புகளைப் பொருத்துவதற்கென எமது நிர்வாகத்தின் பொறுப்பில் உள்ள வீதிகளின் குறுக்காகவும், வீதிகளின் மருங்கிலும் குழிகளைத் தோண்டியுள்ளது. அத்துடன் அந்தக் குழிகளை மீள நிரப்பி புனரமைப்பதற்கென அந்நிறுவனம் எமது அதிகார சபைக்கு ஒரு தொகுதி நிதியையும் செலுத்தியுள்ளது.

எனினும், அந்நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புப் பணிகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. இதனால் வீதிகளில் தோண்டப்பட்ட சில குழிகள் இதுவரை மீள நிரப்பப்படாமல் உள்ளன.

ரெலிகொம் நிறுவனம் தமது இணைப்புகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அவற்றை பரிசோதித்து விட்டு, அந்த வீதியைப் புனரமைக்கலாம் என்ற அனுமதியை எமக்கு அறியத்தரும். அதன் பின்னர் நாம் அந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்வோம்.

யாழ்.கே.கே.எஸ்.வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களில் 'ரெலிகொம்' நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி இணைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன

எனவே, இந்த வீதிகளில் புனரமைப்புப் பணிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். எனினும் வீதி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு குடாநாட்டில் கல், மணல் ஆகியன பெரும் தட்டுப்பாடாக உள்ளன.

அத்துடன் இவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் புனரமைப்புப் பணிகளை துரிதகதியில் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது - என்றார்.

இதேவேளை - நிதிப்பற்றாக்குறை மற்றும் கல், மணல் ஆகியவற்றின் தட்டுப்பாடு காரணமாக ஏற்கனவே புனரமைக்கப்பட்ட வீதிகளைப் பராமரிப்பதற்கும் முடியாதுள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்களும் தகவல் வெளியிட்டுள்ளன. (எ-8-ரி)

| நாளை |
| --- |
| வைகாசி 32 |
| ஞாயிற்றுக்கிழமை |
| 15.06.2003 |
| திதி : பிரதமை |
| பிற்பகல்: 3.25 வரை |
| நட்சத்திரம் : மூலம் |
| மாலை: 5.52 வரை |
| அமிர்தசித்தம் |
| சுபநேரம் : 8.53 - 10.13 |
| ராகுகாலம் : 4.23 - 5.53 |
| (பழைய நேரப்படி) |

## உதய வாக்கு

கனவுலகில் மிதப்போர் எல்லாம் கலாவான்கள் ஆக முடியாது.

# சிசுவை மண்ணில் புதைத்த தாய்க்கு பிணை அனுமதி மறுப்பு

தென்மராட்சி,ஜூன்14

கைதடியில் சிசு புதைக்கப்பட்டது தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிசுவின் தாய் உட்பட இரண்டு பெண்களை பிணையில் விடுமாறு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை பொலீஸாரின் ஆட்சேபனையையடுத்து நிராகரிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சட்டத்தரணி ந.ரவிராஜ் இரண்டு பெண்களையும் பிணையில் விடுமாறு மனு ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு பொலீஸார் ஆட்சேபம் தெரிவித்ததையடுத்து, பிணை மனுவை நிராகரித்த நீதிவான் க.அரியநாயகம் இரண்டு பெண்களையும் எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-117)

# பிரதேச செயலர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்14

கடந்த 12.06.2003 உதயனில் 'புனர்வாழ்வுக்கான நிதிகளை வீணடிக்கும் மீள் நியமனங்கள், நிர்வாகச் செலவுகள்' என்ற தலைப்பில் 'மக்கள மன்றம்' பகுதியில் வெளியாகியிருந்த கட்டுரையில் -

வலி.வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரிநிலையம் ஒன்றில் தங்கிவாழும் மக்களின் குடிதண்ணீர்வசதி கருதி குழாய்க் கிணறு அமைக்கும் திட்டத்தில் முறைகேடு இடம்பெற்றிருக்கிறது என்ற சாரப்பட வெளியான தகவல் தொடர்பாக வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் உதயனுக்கு விளக்கம் ஒன்றை அளித்திருக்கிறார்.

மேற்படி கட்டுரையில் குறிப்பிட்டது போன்ற நலன்புரி நிலையம் எதுவும் வலி.வடக்குப் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்திருக்கவில்லை என்றும் அங்கு குழாய்க்கிணறு அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் எதிலும் வலி.வடக்குப் பிரதேச செயலகம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## பிரதம தபாலக கட்டடப் பணிகள் துரிதகதியில்!

அரியாலை, ஜூன்14

யாழ்.முற்றவெளிப்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் யாழ். பிரதம தபாலகத்தின் கட்டுமானப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் அளவில் மேற்படி தபாலகத்தைத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-17)

## வலி.தென்மேற்கில் குடிதண்ணீர் விநியோக திட்டம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்கில் இரண்டு குடிதண்ணீர் விநியோகத்திட்டங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கட்டுடை குடிதண்ணீர் விநியோகத் திட்டம் 25 லட்சம் ரூபா செலவிலும், காக்கைதீவு குடிதண்ணீர் விநியோகத்திட்டம் 15 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிலும் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி புனரமைப்புத் திட்டங்களுக்கான மதிப்பீட்டுத் திட்டத்தை உடன் தயாரித்து வழங்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மானிப்பாய் பிரதேச சபையைக் கடிதம் மூலம்கேட்டுள்ளார். (எ-185)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்14

எழுத்தாளர் மு.சிங்கராயர் எழுதிய "கூவிப் பறந்த கோகிலங்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறைத தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் சி. நடராஜலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்நூலின் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழக அரசறிவியல்- சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என்.சண்முகலிங்கனும், ஆய்வுரையை கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும் நிகழ்த்துவார்கள். நூலின் முதற பிரதியை தளையசிங்கம் ஏணஸ்ற் பெறுவார். (ஒ-8)

## படகுச்சேவைகள் வழமைக்குத் திரும்பின!

ஊர்காவற்றுறை,ஜூன்14

ஊர்காவற்றுறைக்கும் அனலைதீவுக்கும் இடையிலான படகுச் சேவைகள் மீண்டும் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளன.

படகுகள் பழுதடைந்த காரணத்தினாலேயே இச்சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்பொழுது சேவைகள் ஆரம்பமானதை அடுத்து, தினமும் காலை 7.30, 8.30, 9.30 ஆகிய நேரங்களில் அனலைதீவிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் செல்லும் படகுகள் பின்னர் அங்கிருந்து பிற்பகல் 1.30, 2.30, 3.30 ஆகிய நேரங்களில் அனலைதீவு நோக்கிப் புறப்படும். (எ-10-16)

## நெடுந்தீவில் குணமாக்கல் வழிபாடு

நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் குணமாக்கல வழிபாடு நடைபெறவுள்ளது.

தென்னிந்தியா போட்டா ஆச்சிரமத்தில் இருந்து வருகை தந்திருக்கும் அருள்திரு. சேவியர் அருள்ராஜ், சகோதரன் மானி ஆகியோர் இவ்வழிபாடுகளை நடத்துவர் என நெடுந்தீவு பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.(எ-30)


### தவறிவிட்டது

புலோலியைச் சேர்ந்த கதிர்காமு கனகராஜா என்பவருடைய தே.அ. அட்டை (இல.570040669V), கண்டாவளை பாஸ் அடங்கிய பேர்ஸ் முகமாலைக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்:

சிவகணேஸ் புத்தக நிலையம்
சந்தை வீதி, கொடிகாமம்,
070-21 3156, 077-27 3007
எனும் முகவரியுடன்
தொடர்புகொள்ளவும். (19051)


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
02-02-1936

இறப்பு
14-06-1993

## பேதுருப்பிள்ளை கபிரியேல்பிள்ளை

பாசத்தின் உறைவிடமாய்
அமைதியின் இருப்பிடமாய்
பண்பான நிறைகுடமாய்
பாரினில் வாழ்ந்திருந்தீர்
விளையாட்டு வினையானதோ
உங்கள் உயிரை எமன் கவர்ந்து
சென்றானோ?
ஆண்டுகள் பத்து எப்படித்தான்
சென்றதோ?
உங்கள் பிரிவைத் தாங்க
முடியாமல்
தவிக்கின்றோம் துடிக்கின்றோம்
அப்பா!

உங்கள் ஆன்மா அமைதியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

மருமகன், பிள்ளைகள்,
பேர்த்திகள்.

5ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (19096)

## கட்டடப் பொருள்களை வழங்குவதற்கான கூறுவிலைகள்

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் செயற்படுத்தப்படவிருக்கும் திட்டத்திற்காக கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்களுக்கான கூறுவிலைகள் 20-06-2003ஆம் திகதி 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கூறுவிலைகள் 'பிரதேச செயலாளர், தென்மராட்சி, சாவகச்சேரி' என்று முகவரியிட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கூறுவிலை உள்ளடக்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கட்டடப் பொருள்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. கூறுவிலையின் ஒரு பகுதியையோ அன்றேல் முழுவதையுமோ எவ்வித காரணமும் காட்டாது நிராகரிக்க பிரதேச செயலருக்கு முழு உரிமை உண்டு.
4. கூறுவிலைகள் யாவும் 20-06-2003 அன்று பிற்பகல் 3.00 மணிக்குத் திறக்கப்படும்.

கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது பிரசன்னமாயிருக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் எனது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச செயலர்,
தென்மராட்சி.

| | |
|---|---|
| 1. கண்ட கல் | 08 கியூப் |
| 2. மணல் | 32 கியூப் |
| 3. 3" x 2" x 10' மரச்சலாகை (வகுப்பு II) | 160 எண்ணிக்கை |
| 4. 2" x 2" x 7' " " | 5580 எண்ணிக்கை |
| 5. 4" x 2" x 18' " " | 620 எண்ணிக்கை |
| 6. 2" x 1" " " | 5500 எண்ணிக்கை |
| 7. அஸ்ரன் செல்ரா சீற் 4' | 11160 எண்ணிக்கை |
| 8. அஸ்ரன் செல்ரா சீற் 6' | 320 எண்ணிக்கை |
| 9. சீமெந்து யப்பான் மிற்சுபி | 595 பைக்கற் |
| 10. மலசலகூட பேசின் (17" x 10" பொறியுடன்) | 40 எண்ணிக்கை |
| 11. 4" பி.வி.சி. பைப் | 160 அடி |
| 12. கொங்கிறீற் தூண் 5"x 5"x 8' 6" 1:2:4 (3/4) 3இல 3/8" முறுக்கு கம்பி 1/4" விட்டமுள்ள மெல்லிரும்பு ஸ்ரிப்பஸ் 8" இடைவெளியில் வைத்துக் கட்டி வலிதாக்க வேண்டும். | 1860 எண்ணிக்கை |
| 13. சீமெந்து அரிவுகல் 4"( 1:4:5 (3/4") | 8000 எண்ணிக்கை |

(சி-28389)





பெறுபேறுகள் எதுவானாலும்... நீங்களும் சேரலாம்

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டீர்களா? சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு பட்டத்தைப் பெற விரும்புகிறீர்களா? அதிகப்படியான கட்டணங்கள், வெளிநாட்டுப் பயணச் செலவு. . . இதுதானே உங்கள் பிரச்சினை? இந்தப் பிரச்சினைகள் எதுவுமில்லாமலே பட்டப்படிப்பை மேற்கொள்ள நாம் வழிகாட்டுவோம்.

## ANC உங்களை வரவேற்கிறது!

நாம் தனித்துவமாக விளங்குவது ஏன்?

நீங்கள் உயர்தரப் பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கும்போதே, அமெரிக்காவிலுள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களுடன் விரைவாகவும் இலகுவாகவும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க எம்மால் முடியும்.

இடமாற்றம் பெற்றுத்தர முடியுமா? ஆம்?

அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்கப் பாடக்குறிப்புக்கள் கலிபோர்ணியாவின் **Patten** பல்கலைக்கழகத்தின் ஊடாக **ANC** மாணவர்களுக்கு வழங்கப்படும். **Patten** பல்கலைக்கழகம் **WASC** (மேற்கத்திய பாடசாலைகள், கல்லூரிகளின் சங்கம்) அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. **WASC** அமைப்பு **Stanford, Berkley, UCLA** போன்ற புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ANC** யின் அங்கத்துவ பல்கலைக்கழகங்கள்

**Rochester** தொழில்நுட்ப நிலையம், **Pepperdine** பல்கலைக்கழகம், **Wisconsin** பல்கலைக்கழகம். . . இன்னும் பல.

ஒரு பட்டம் அல்லது இரட்டைப் பட்டம்!

நீங்கள் பொறியியல், வியாபாரம், தகவல் தொழில்நுட்பம் அல்லது உடல்நல விஞ்ஞானத் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். **Robotics** அல்லது **Aeronautics** துறையில் விசேட நிபுணத்துவமும் பெறலாம். நீங்கள் விரும்பினால் இரு துறைகளை இணைத்து இரட்டைப் பட்டத்தையும் பெறமுடியும்.

**SAT, TOEFL** ஆகியவற்றிற்கு **ANC**யில் தயார் செய்ய முடியுமா? ஆம்!

எமது **SAT** மற்றும் **TOEFL** நிகழ்ச்சித் திட்டங்கள் மிகச் சிறந்த பாடத்திட்டங்களினதும் கற்பித்தல் முறைகளினதும் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. அவை அமெரிக்கப் பல்கலைக்கழக வளாகங்களினால் மேற்பார்வை செய்யப்படுவதால் தரமுயர்ந்தவை.

உயர்கல்விப் பாதையில் 45%, 65% அல்லது 80% வரை சேமியுங்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதியுதவி நன்மைகளை அனுபவியுங்கள்.

2+2 வழிமுறை 2 ஆண்டுகள் இலங்கையிலும் 2 ஆண்டுகள் அமெரிக்காவிலும்.
3+1 வழிமுறை 3 ஆண்டுகள் இலங்கையிலும் 1 ஆண்டு அமெரிக்காவிலும்.
4+0 வழிமுறை 3 முதனிலைப் பட்டம் இலங்கையிலும் முதுநிலைப் பட்டம் அமெரிக்காவிலும்.

### யாழ்ப்பாணத்தில் ANC கருத்தரங்கு

**இடம்: பிள்ளையார் இன் (31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்)**
**திகதி: 2003 ஜூன் 14 (சனிக்கிழமை) நேரம்: மு.ப. 10.30**

மேலதிக விபரங்களுக்கும் ஆசனப் பதிவுகளுக்கும் ஜூன் 13 ஆம் திகதி பி.ப. 5.00க்கு முன் தொடர்புகொள்ளவும்:

திரு. இப்திகார் மரிக்கார்
த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
இல.173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2222310

அமெரிக்கன் நஷனல் கொலிஜ்
· செலிங்கோ கூட்டுநிறுவனத்தின் அங்கத்தவர்

AMERICAN NATIONAL COLLEGE
A Member of Ceylinco Consolidated

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அதிகாலை 5மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். அன்று வைத்திய கலாநிதி உரோ. மகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 'பிரதேசமலர்' வெளியிட ஏற்பாடு

வலி.தெற்கு,ஜூன்14

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் 'பிரதேசமலர்' ஒன்று வெளியிடப்படவுள்ளது.

பிரதேச மலருக்கான ஆக்கங்கள் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் வரலாறு, வளங்கள், மக்களின் வாழ்க்கை நிலைகள் போன்றவற்றை ஆவணப்படுத்தும் ஒரு செயலாக இம்மலர் வெளியிடப்படும்.

இது தொடர்பாக முக்கிய நிறுவனங்களிடமிருந்து தரவுகள், வரலாறுகள் என்பவற்றை கையெழுத்துப் பிரதிகளாகப் பெற்று மலரை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என சபையின் செயலாளர் தெரிவித்தார். (எ-152)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மரநடுகை

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால், உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பொது இடங்களில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக பொது இடங்களில் உள்ள பல மரங்கள் கவனிப்பாரின்றி அழிந்துபோயுள்ளன. இதனால், ஏற்பட்டுள்ள சூழல் பாதிப்பினைக் கருத்திற்கொண்டு தற்பொழுது சமண்டலை மரக்கன்றுகள் நடுகை செய்யப்படுகின்றன.

குறிப்பாக ஊர்காவற்றுறை, நாரந்தனை, காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இவ்வாறு மரங்களை நட்டு பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (எ-16)

## போதிய தடுப்பு மருந்து வழங்கப்படவில்லை என முறைப்பாடு

வலிகாமம் தெற்கு கால்நடை வைத்தியர் பிரிவுக்கு வளர்ப்பு நாய்களுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் போதியளவு வழங்கப்படவில்லை என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அநேகமான வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்துகளை வழங்கமுடியாதநிலை ஏற்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.

இதற்கிடையில், அண்மையில் மேற்படி கால்நடை வைத்தியர் பிரிவுக்கு கிடைத்த நோய்த்தடுப்பு மருந்துகள் பிரதேச வளர்ப்பு நாய்கள் முழுவதற்கும் ஏற்றுவதற்கு போதியதாக இல்லாதிருந்தமையால் ஒரு சில பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளுக்கே அவற்றை பயன்படுத்த முடிந்தது என்று வலிகாமம் தெற்கு கால்நடை வைத்தியர் தெரிவித்தார். (எ-152)

## மானிப்பாய் பிரதேசத்தில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு போட்டிகள்

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகள் யாவும் அடுத்த மாதம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி உதவியாளர், வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.திறந்தவெளி அரங்கு மிகவிரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் மோசமாகச் சேதமடைந்துள்ள யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கு மிகவிரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க யாழ்.செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற தேசிய விளையாட்டு விழா தொடர்பான கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி முதல் நான்கு தினங்கள் இங்கு நடைபெறவுள்ள வடக்கு - தெற்கு தேசிய சமாதான விளையாட்டு விழாவையொட்டிய நிகழ்வுகள் பற்றி ஆராயப்பட்டது.

விளையாட்டு விழாவையொட்டி கலை, கலாசார நிகழ்வுகளை நகரில் நடத்தவேண்டும் என்ற திட்டமும் முன்வைக்கப்பட்டது. கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்கு வசதியாக யாழ்.திறந்தவெளி அரங்கைப் புனரமைக்கவேண்டும் என்ற கோரிக்கையும் அங்கு விடுக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மேலதிக அரச அதிபர், திறந்தவெளி அரங்கைப் புனரமைக்க நிதி கிடைத்துள்ளதாகவும் விரைவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (ம-5)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

கொழும்புத்துறை,ஜூன்14

யாழ். அகவொளி நிலையத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள முழுநிலா நாள் கருத்தரங்கில் பேச்சுவள சிகிச்சை நிபுணர் கலாநிதி சௌமியா ரட்நாயக்கா கருத்துரை வழங்கவுள்ளார்.

'பேச்சுவள சிகிச்சையும் மனநலமும்' என்னும் தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் பேச்சுவளம் குன்றியோர், அவர்களின் பெற்றோர், பராமரிப்பாளர் மற்றும் தொடர்புடைய நிறுவனம் சார்ந்தோரை பங்குபற்றி பயன்பெறுமாறு அகவொளி இயக்குநர் ஆர்.இராசநாயகம் அடிகள் கேட்டுள்ளார். (எ-30)

# வன்னி மாணவரின் கல்விக்கு கல்விக் கழகமே உயிர்நாடி

## புதுக்குடியிருப்பு கோட்ட அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்14

தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையில் எழுந்த கல்விக் கழகமே இன்று வன்னிப் பிரதேச மாணவர்களின் கல்விக்கு உயிர் நாடியாக உள்ளது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சுந்தரலிங்கம்.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கல்விக் கழகத்தின் திறமையான செயற்பாட்டினால்தான் இன்று வன்னிப் பிரதேசத்தில் பாடசாலைகளை திறம்பட இயக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு 85 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையே உள்ளது. ஆனால், தென்னிலங்கையில் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற ரீதியில் கல்வி கற்பித்து வருகின்றனர்.

இதன்மூலம் வன்னிப் பிரதேச மாணவர்கள் கல்வியில் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகிறது. மாற்றாந்தாய் பிள்ளைகள் போன்றுதான் அரசாங்கம் எமது மாணவர்களை நோக்குகிறது. இதன் மூலம் அரசே எமது மாணவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தூண்டுகிறது. எமது உரிமைகளை நாம் போராடிப் பெறவேண்டிய நிலையே உள்ளது - என்றார். (ம-10-ரி)

## கட்டடத் திறப்பும் நூல் வெளியீடும்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் தலைமைச்செயலக கட்டடத்திறப்பு விழா இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். தொடர்ந்து சிறப்பு மலரையும் வெளியிட்டுவைப்பார்.

இந்த நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கம்பவாரிதி இ. ஜெயராஜ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-160)

# 'எக்ஸ் - ரே' படங்களை உடன் பெறுவதற்கு வசதி

## யாழ்.ஆஸ்பத்திரியில் புதிய கருவி

யாழ். போதனா வைத்தியசாலையில் இப்போது எக்ஸ் - ரே படங்களை உடனுக்குடன் பெறும் வசதி ஏற்பட்டுள்ளது. இதற்கென கணனிமயப்படுத்தப்பட்ட தானியங்கி எக்ஸ் - ரே பிலிம் கழுவும் நவீன இயந்திரம் ஒன்று வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இயந்திரம் நேற்றுமுதல் வைத்தியசாலையில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதன்மூலம் அவசர சிகிச்சைக்கு வேண்டிய எக்ஸ் - ரே படங்களை உடனுக்குடன் பெறும் வசதி ஏற்பட்டுள்ளது. இதனால், சிகிச்சை அளிப்பதில் சற்று முன்னேற்றம் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

இவ்வளவு காலமும் எக்ஸ் - ரே பிலிம்களை கழுவி பல மணி நேரம் வெயிலிலும், காற்றிலும் உலர்த்திய பின்பே அதனை வைத்திய தேவைக்கு பயன்படுத்தும் நிலை இருந்து வந்தது. புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள இயந்திரத்தின் மூலம் 90 செக்கன்களில் ஒரு எக்ஸ் - ரே படத்தைப் பெறமுடியும். அதனைக் கொண்டு சிகிச்சைகளை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (ம-15)

# அதிகரித்து வரும் வன்முறைகள் சமூக ஆரோக்கியத்துக்கு கேடு

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

அண்மைக்காலமாக அதிகளவில இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் சமூக ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதிக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் த.சுபத்திரன்.

குடாநாட்டில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுன்னாகத்தில் எமது அணியைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் ஒருவரின் இரண்டு கைகளும் வெட்டப்பட்டு மோசமாகப் படுகாயப்படுத்தப்பட்டிருக்கிறார். அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் இத்தகைய வன்முறைச் சம்பவங்களுடன் விடுதலைப் புலிகளே தொடர்புபட்டுள்ளனர். அந்த வகையில் இதனையும் புலிகளே மேற்கொண்டிருப்பார்கள் என நாம் கருதுகிறோம். எவ்வாறாயினும், வெட்டப்பட்டு படுகாயமடைந்தவர் உயிருடன் இருப்பதனால் அவரின் வாக்குமூலமே சரியானதாக இருக்கும். இருப்பினும், அரசியலுக்காகவோ அன்றி வேறு காரணங்களுக்காகவோ இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதனை அனுமதிப்பது ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பை பேணிக்கொள்ள ஒரு போதும் உதவப் போவதில்லை.

- இவ்வாறு சுபத்திரன் தெரிவித்தார். (ஐ-ரி)

## மட்டு. ஈ.பி.டி.பியினருடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றதாக ஈ.பி.டி.பி. அமைப்பினால் செய்யப்பட்ட யுத்தநிறுத்த மீறல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி நேற்றுமுன்தினம் அந்த அமைப்பின் மட்டக்களப்பு பிரதிநிதியுடன பேச்சு நடத்தினார்.

இருகொலைகள், மூன்று ஆள் கடத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 29இற்கும் மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல் முறைப்பாடுகளை ஈ.பி.டி.பி. அமைப்பு செய்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மாவட்ட அதிகாரி மௌலி வன்கண்ணன் நேற்றுமுன்தினம் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் சந்தித்துப் பேசினார்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் மாவட்ட துணைப் பொறுப்பாளர் பரணிதரன் பிரதீபனுடன் பேச்சு நடத்திய வன்கண்ணன் அவர்களது முறைப்பாடுகள் குறித்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொண்டார். (ம-9)



படையினரின் கெடுபிடிகளைக் கண்டித்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், அந்த இரு மாவட்டங்களும் முற்றாகச் செயலிழந்தமை தெரிந்ததே. அன்றைய தினம் ஹர்த்தாலை முன்னிட்டு மட்டக்களப்பு நகர வீதிகள் சிலவற்றில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. அவ்வாறு எரிக்கப்பட்ட ரயர்களை விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்து அகற்றுவதைப் படத்தில் காணலாம்.

### சாவகச்சேரி லயன்ஸ் கழக வெள்ளிவிழாவை முன்னிட்டு

# தென்மராட்சிப் பகுதியில் நலனோன்புத் திட்டங்கள்

தென்மராட்சி,ஜூன்14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவினையொட்டி தென்பகுதியில் உள்ள லயன்ஸ் கழகங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் பல நலனோன்புத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

தென்பகுதி வைத்திய நிபுணர்களின் இலவச மருத்துவ சேவைகள், வறிய குடும்பங்களுக்கு உடுபுடவைகள் வழங்கல், வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படைத் தேவைப் பொருள்கள் வழங்கல், ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கல், முன்பள்ளி சிறார்களுக்கான நலனோன்பு பொருள்கள் வழங்கல் உட்பட பல திட்டங்களை மேற்கொள்ளவுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2004ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த நலனோன்புத் திட்டங்கள் மாதாந்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கழகச் செயலாளர் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ஒ-117)

# காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயமா? யாழ். கிளைக்கு எந்த அறிவிப்பும் இல்லை

## முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

லாபமறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டு விட்டபோதிலும், இதுவரை அது தொடர்பாக தமக்கு உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

தமது தலைமையகம் முழுமையாக அரசாங்கத்திலிருந்து விலகி தனியார் மயப்படுத்தப்பட்டு விட்டநிலையிலும் இதுவரை அது தொடர்பான பணிநிலை மாற்றங்களோ, பெயர் மாற்றங்களோ யாழ். அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் - அவர் தெரிவித்தார்.

தமது கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டுவிட்டது என்ற தகவல்கூட தமக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனவும் -

ஊடகங்கள் வாயிலாகவும் உத்தியோகப்பற்றற்ற முறையிலுமே இந்தத் தகவலை தாம் அறிந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே, இதுவரை தமது அன்றாட பணிகள் யாவும் முன்னைய நடைமுறைகளின்படியே நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-4)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Gx7 XXX தொடரிலக்கமுடைய குபேட்டா லான்ட் மாஸ்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (19104)

அவுசா அம்பிளிவயர் 400W, 80W, 60W, நீளக்கோண்கள் 24" யூனிற் - 60W, 40W, லைன் ரான்ஸ் போமர்கள், 9 சனல் மிக்ஸர்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (19067)

புதிய ரெலிபோன் பூத் (**Tele-Phone Booth**) நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. கணேசன், கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி. **T.P.** 222 - 2585, 222 - 3423 (19080)

## வீடு விற்பனைக்கு

கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு (மேல் மாடி கட்ட உகந்தது). தொடர்பு: S.சொல்வேந்தன் 21/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம். (19099)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி, கணேஸ்வரத்தில் பஸ் ஓடுகின்ற ரோட் அருகில் கிணறு, குழாய்க்கிணறு மற்றும் 30 காய்க்கும் தென்னைகளுடன் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடியதும் தோட்டஞ் செய்யக்கூடியதுமான 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆனந்தி தொலைத்தொடர்பகம், 8ஆம் கட்டைச் சந்தி, காங்கேசன்துறை வீதி, துர்க்காபுரம், தெல்லிப்பழை. (19089)

2ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் நல்ல சுற்றாடலில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: **R.A.D.** ஆனந்தராஜா, இல.386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (19110)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகான, 3 இன தடுப்பு ஊசி போடப்பட்ட நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தை, நல்லூர். (18993)

## இறைச்சிக்கோழி

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன்சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். (**Electronic** நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (18992)

## புறொயிலர் விற்பனைக்கு

நிறைகூடிய தரமான பகிரா No. 1 புறொயிலர்கள் விற்பனைக்குண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. 1kg - 145/- சுத்தம் செய்யப்பட்டது 1Kg 230/- தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (19107)

## இசைக் குறிப்புக்கள்

ஓகன், வீணை, மெலோடிக்கா போன்ற இசைக் கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் "இசைக் குறிப்புக்கள்"எனும் புத்தகம் (பாகம்-7) வெளிவருகிறது. தொடர்பு: S.S. ரஜீந்திரன், இல.75, கோவில்வீதி (நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 700m தெற்கே). T.P.: 0777- 031293(18551)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். சனீஸ்வரன், வியாழபகவான் ஆகிய கிரகங்களால் துன்பமா? தினமும் சந்திக்கலாம். தொடர்பு: சி.சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை.(18527)

## திருமண சேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்புரியும் மணமகள்களுக்கு *படித்த, பட்டதாரி மணமகன்கள்* தேவை. படம், ஜாதகம் என்பவற்றுடன் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். தபால்மூலம் ஏற்கப்படமாட்டாது. தொடர்பு: லலிதா திருமணசேவை, N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (18968)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, அரச வங்கியில் கடமையாற்றும் மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1923, மே/பா. உதயன். (18988)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தவர்களான 1967 (B.Sc.) அத்தம் ஆசிரியருக்கும் 1966 அவிட்டம் செவ்வாய் 8 புள்ளியான சிறுதொழிலும் முதுசகாரன், 1969 பூசம் செவ்வாய் 8 புள்ளி கொம்பனி உதவி மனேச்சர் லண்டன் பிரஜைக்கும் படித்த மணமக்கள் தேவை. தொடர்பு: இராமணாதன், பூம்பத்தை வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (18822)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு பேரம்பலம் கனகம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன முகமாலை - யாழ்ப்பாணம் மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புத்தூர்ச் சந்தி விக்கினேஸ்வரா களஞ்சியம் அல்லது சாவகச்சேரி செல்வம் கூல்பாரில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (19115)

## வாடகைக்கு

இல.767, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண முகவரியிலுள்ள 40 தென்னங்கன்று வருமானமுள்ள, அற்றாச் பாத்றூம், ஷவர், சகல அறைகளுக்கும் மின்விசிறியுள்ள இரம்மிய சூழலில் அமைந்த 5 அறை வீடும், 3 கடைத் தொகுதியும் வாடகைக்குண்டு. தொடர்பு நேரில். T.P. 3175. (19101)

## கடை வாடகைக்கு

இலுப்பையடிச்சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் பலாலி வீதியில் இரு கடைகள் ஜூலை 1 முதல் வாடகைக்குண்டு. தொடர்பு:- 071-245966. (19079)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பலவருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகள், 2 வருட வினாத்தாள்கள் உட்பட குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேறுகளைப் பெற தொடர்பு: 3மணிக்குப் பின் R.பாலசுப்பிரமணியம் **B.Sc.(Con) Dip.in Ed. 17/1**, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். (19094)

## சமய சந்நிதிகளில்

வலி.தெற்கு,ஜூன்14

சுன்னாகம் மயிலணி ஸ்ரீசர்வமங்கள இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயிலில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10மணி முதல் பௌர்ணமி விழா நடைபெறவுள்ளது.

நண்பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (எ-152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

நயினாதீவு பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் வேள்வி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவரும் வருடாந்தத் திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு முதல் திருப்பலியும் 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறவுள்ளன. (எ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

தெல்லிப்பழை கிழக்கு குருநாதசுவாமி கோயில் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10.09 மணி தொடக்கம் 11.49மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது. (எ-10)

## கௌரவிப்பு

அச்சுவேலி,ஜூன்14

கொழும்புத்துறை மன்றுளாடும் சித்தி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ காலத்தில் தொடர் தெய்வீகப் பேருரை ஆற்றிய மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம், சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன், சைவப்புலவர் நித்திய சசீதரன் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-11)

## தாதி தேவை

**தாதியாக வேலைசெய்ய (மாநகர எல்லைக்குட்பட்ட) பெண்பிள்ளைகள் தேவை.**

**நடனமுருகன் வைத்திய நிலையம்**
**சத்திரத்துச் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**
T.P. 3635 (19116)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

**இமையாணன் மேற்கு - உடுப்பிட்டி**
**விஸ்வகுல ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய**
## 10ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

இன்று (14.06.2003) சனிக்கிழமை காலை 7.00மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி பிற்பகல் 1.00மணிக்கு நிறைவுபெறும்.

இரவு 7.00மணிக்கு வசந்தமண்டபப் பூசையாகி திருவூஞ்சல் நடைபெற்று அம்பாள் முத்துச்சப்பரத்தில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

ஆலயபிரதம குரு: சிவத்திரு செவ்வந்திநாதன் ஐயா
சங்காபிஷேகப் பிரதமகுரு: கிரியாவித்தகர்
சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்தராஜக் குருக்கள

**விசேட நிகழ்ச்சிகள்**

மங்கள இசை: L.S.ஜெகநாதன் குழுவினர் - உடுப்பிட்டி.
பட்டிமன்றம்: வாழ்க்கை என்பது போராட்டமா? பூந்தோட்டமா?
நடுவர்: சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் நவம் ஆசிரியர்
☆ சாரங்காவின் ராஜராகங்கள் இன்னிசை விருந்து ☆
ஒலி அமைப்பு: துரை சவுண்ஸ் சேவிஸ
ஒளி அமைப்பு: கணபதி மின் அமைப்பு (வல்வெட்டித்துறை)
மேடை அமைப்பு: லிங்கம்ஸ் பந்தல் சேவை (கரணவாய்)

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
- விஸ்வகுல இளைஞர்கள்.

(19121)

JOB ADVERTISEMENT

## District Mine Survivors Rehabilitation Coordinator

In the framework of its partnership with UNICEF, Sarvodaya seeks a dynamic District Mine Survivors Rehabilitation Coordinator to be posted at the District Mine Action Office (Jaffna) on a full - time basis.

**1. Duties and responsibilities**

The incumbent will liaise with all actors involved in mine/UXO survivor assistance in the District to ensure that mine survivors have access to all rehabilitation services available (notably psychosocial support, vocational training and microfinance programmes). S/he will maintain the Mine Survivors database and interact with the rest of the mine action partners, i.e. demining agencies, mine risk education organizations (local and international partners). S/he will organize workshops, training and special events on issues relating to Mine Survivor Assistance, as well as draft interest stories about mine survivors. The incumbent will also monitor the implementation of specific assistance projects (financial aspects and substance). The working language will be English and Tamil.

**2. Qualifications required**

* Higher education and/or relevant working experience in a related field (health, sociology, business administration, etc.)
* Prior successful experience working at the community level (especially on social mobilization and empowerment) is an asset.
* Previous experience working with people with physical and mental disabilities is an asset.
* Knowledge of the socio - economic impact of mines/UXO on people and communities
* Advocacy, training and facilitation skills
* Good planning and organization skills
* Sense of initiative and ability to work under minmum supervision
* Excellent writing and presentation skills in English and Tamil
* Computer skills (word and excel)
* Motorbike licence appreciated

Please send your detailed **BIODATA IN ENGLISH** to the **Sarvodaya office, No.3, Fletcher Lane, Chundukuli, Jaffna.**
before or **on 20 June 2003.**

Only candidates under serious consideration will be contacted.

(19113)

## City & Guilds London (U.K.) Dec. 2003 பரீட்சை

**A/L தராதரத்துடன் 18 மாதகாலத்தில் சர்வதேச தராதரம், U.K. பல்கலைக்கழகங்களில் Final Year அனுமதிகள், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறி; உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்புக்கள். பரீட்சைகள் British Councilலினால் நடத்தப்படும்.**

| Telecommunication Systems Engineering | Telecommunications & Electronics Engineering | Electrical & Electronic Engineering |
|---|---|---|

**Certificate, Diploma, Advanced Diploma**

Entry Qualification: Certificate Level - G.C.E. O/L, Diploma Level - G.C.E. A/L

பயிற்சிநெறிகளைக் கற்க விரும்புவோர் அனுமதிகளை எதிர்வரும் 16, 17, 18, 19ஆம் திகதிகளில் நேர்முகப்பரீட்சை ஒன்றின்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

*Course Director*: **K.Chandirabose** I.Eng.MIIE (சி-28394)

**VICKNAA TUTION CENTRE**
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**APSS International**
57, E.S. பெர்னாந்து மாவத்தை,
கொழும்பு - 06. T.P.: 362547

## மரண அறிவித்தல்

### சின்னையா பாலசிங்கம்

உடுவில், ஆலடியைச் சேர்ந்த சின்னையா பாலசிங்கம் (நெல்சந்தைப் படுத்தும் சபை, ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர்) 12.06.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - கண்மணி தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற அரியநாயகம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சொர்ணமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசமணி மற்றும் சரஸ்வதி (பிரான்ஸ்), பவளரத்தினம் (வவுனியா), பரமேஸ்வரி, காலஞ்சென்ற மருதலிங்கம் மற்றும் சோதிமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை மற்றும் சிதம்பரலிங்கம் (கண்டி), மூத்துலிங்கம் (வவுனியா), தெய்வேந்திரம், சரோஜினி, ஸ்ரீபாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயந்திமாலா மற்றும் ஜெகதீசன் (ஜெறி, கனடா), றொகான் பிரியதர்ஷன் (கனடா), தர்மினி (கனடா), சத்தியசீலன (பிரான்ஸ்), சாமினி ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் சிவானந்தமலர் (கனடா), விஜிதா (கனடா), முரளி (கனடா), சஞ்சய் ஆகியோரின் மாமனாரும் ராஜ்குமார் (ஹொலண்ட்), கிருஷாந்த், வினோஷாந்த், பிரஷாந்த், தர்ஷிகா, சுவேகா, திவ்யன், ஆரணி, அரவிந்த், ஆரத்தி, ஆஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி, மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*
(19109)
தகவல்:
சாமினி (மகள்)

# பருத்தித்துறை கரையோரக்கடலில் முருகைக்கற்கள் அகழும் பணி

## மீனவர் நன்மை கருதி நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்14

பருத்தித்துறை நகர கடற்கரை யோரக் கடற்பகுதியில் பெருமளவில் காணப்படும் முருகைக்கற்களைத் தோண்டி அகற்றி கடலை ஆழப் படுத்தும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரையில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்கு பரந்து கிடக்கும் முருகைக்கற்களால் மீனவரின் படகுகள் சேதமடைகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக முருகைக்கற்களைத் தோண்டி அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கரையோரக்கடலை ஆழப்படுத்துவதன்மூலம் மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபட வசதி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 50பேர் வரையானோர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்படும் முருகைக்கற்கள் அகற்றும் வேலைத் திட்டத்தில் பருத்தித்துறை துள்ளுமீன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ம-185)

# இரவோடிரவாக மணல் திருட்டு யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக மணல் திருட்டு அதிகரித்து வருகின்றது, டிராக்டர்கள், லான்ட் மாஸ்டர்களில் நள்ளிரவு வேளைகளில் இந்த மணல் கடத்தல் இடம் பெறுகின்றது.

சட்டவிரோதமாக இடம்பெறும் இந்த மணல் கடத்தலால் சில மணல் அகழப்படும் பிரதேசமும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதனால் பெரும் சுற்றுச்சூழல் ஆபத்து ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக சுற்றுச் சூழலியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு பொலீஸார் எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளாது இருப்பது குறித்து பொதுமக்கள் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. இருளில் நடக்கும் இந்த மோசடியைத் தடுப்பதற்குப் பதிலாக அதிகாரிகளும் சம்பந்தப்பட்டவர்களும் தொடர்ந்து காட்டிவரும் மெத்தனப்போக்கு இது விடயத்தில் ஊழல்கள் இடம்பெறுவதான சந்தேகங்களைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அரியாலை மற்றும் இருபாலை கிழக்குப் பகுதிகளில் இருந்து மிக அண்மைக்காலமாகப் பெருமளவு மணல் கடத்தல் இடம்பெற்று வருகின்றது.

இருபாலை பகுதியில் இருந்து மணல் ஏற்றிவரும் டிராக்டர்கள் பயணிக்கும் பருத்தித்துறை வீதிக்கு மேற்காக சுமார் 500 மீற்றர் தூரத்துக்குள் கோப்பாய் பொலீஸ் நிலையம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒருசில குறிப்பிட்ட டிராக்டர் உரிமையாளர்களே இந்த மணல் திருட்டில் தொடர்ந்து ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது. இதில் அவர்களுக்கு கொள்ளை லாபம் கிடைப்பதால் மணல் திருட்டைத் தடுக்க முயல்பவர்களைத் தாக்குவது மற்றும் மிரட்டுவது போன்ற அராஜகச் செயல்களிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தவிடயத்தில் சம்பந்தப்பட்டவர்களின் விரைவான நடவடிக்கையை பொதுமக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். (ம)

# வித்துவான் வேலனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூன்14

லண்டனில் காலமான தமிழறிஞர் வித்துவான் க.ந.வேலனுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கம்பவாரிதி இ.ஜெயராஜ், 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றுவர்.

தமிழறிஞரும் பிரபலமான பேச்சாளரும், யாழ்ப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் தமிழாசிரியருமான வித்துவான் க.ந.வேலன் பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். பல தமிழ் இலக்கிய அமைப்புகளிலும் பணியாற்றியுள்ளார். (ஐ)

# களவாக மணல் ஏற்றிய லான்ட்மாஸ்டர் சிக்கியது

## அரியாலையில் சம்பவம்

வலி.வடக்கு,ஜூன்14

அரியாலைப் பகுதியில் அடுத்தவர்களின் காணிகளில் இருந்து களவாக மணல் ஏற்றி வந்த லான்ட் மாஸ்டர் ஒன்று நேற்றுமுன்தினம் பொலீஸாரினால் மடக்கிப்பிடிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் கடந்த பல மாதங்களாக களவாக மணல் ஏற்றப்பட்டு வந்தது. இது தொடர்பாகக் கிடைத்த பல முறைப்பாடுகளைத் தொடர்ந்து பிரதேச செயலர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் பொலீஸாரின் உதவியுடன் நேற்றுமுன்தினம் அப்பகுதிக்குச் சென்றனர். அங்கு மணல் ஏற்றிக்கொண்டிருந்த லான்ட்மாஸ்டர் ஒன்று கைப்பற்றப்பட்டு யாழ்.பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

பொலீஸார் அப்பகுதிக்குச் சென்றதும் மணல் ஏற்றத் தயாராக நின்ற டிராக்டர்கள் பல தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி விடயம்:

# நிதிப் பிரமாண விதிகளுக்கு முரணாக செயற்பட்ட அதிபர்கள் மீது நடவடிக்கை

## மாகாணக் கல்வி அமைச்சு அறிவிப்பு

அச்சுவேலி,ஜூன்14

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியை நிதிப்பிரமாண விதிமுறைகளுக்கு புறம்பான முறையில் - முன்னனுமதி இன்றி - பயன்படுத்திய பாடசாலை அதிபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

பாடசாலைகள் சிலவற்றில் அபிவிருத்திச் சங்க நிதி பெருமளவில் முன்னனுமதி இன்றி பயன்படுத்தப்பட்டதாகக் கிடைக்கப்பெற்ற முறையீட்டைத் தொடர்ந்தே மாகாணக் கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முன்னோடியாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் இருந்து பூரண விளக்க அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வரவு - செலவு அறிக்கை, கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பற்றுச்சீட்டு, மற்றும் உறுதிகள் உள்ளடங்கிய முழு விவரங்களையும் சம்பந்தப்பட்ட அதிபர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-11)



ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் கொழும்புத்துறைப் பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் நிறுவனத்தின் வீடமைப்புத் திட்ட உத்தியோகத்தர் எஸ்.பரராஜசிங்கம், அருட்திரு. சாள்ஸ் அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை, படத்தில் காணலாம். சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரகுமாரும் அருகில் காணப்படுகின்றார்.

*(படம்:கொழும்புத்துறை செய்தியாளர்)*

# திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். சைவ பரிபாலன சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருஞானசம்பந்த நாயனார் குருபூசை தின நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

# 'நவீல்ட்' ஆண்டுதின விழா

ஊர்காவற்றுறை,ஜூன்14

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலையின் 36ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் க.மகேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-10-16)

# சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் பொலீஸாரிடம் சிக்கியது

வலி.வடக்கு,ஜூன்14

அரியாலை, இராஜேஸ்வரி வீதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையம் ஒன்று பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று இந்த மதுபான விற்பனை நிலையத்தை சுற்றிவளைத்த பொலீஸார் அங்கு விற்பனைக்குத் தயாராக இருந்த மதுபானங்கள், கசிப்பு என்பவற்றைக் கைப்பற்றினர். (ம-86)

# போராளியை விடுவித்தால் பொலீஸாரை விடுவிப்போம்

## விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

அச்சுவேலி,ஜூன்14

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, புளியந்தீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜை விடுவித்தால் தம்மால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு பொலீஸாரையும் விடுவிப்பதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று மட்டக்களப்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 5ஆம் திகதி மட்டக்களப்பில் கட்டுக்கொல்லப்பட்ட ராஸிக் குழு உறுப்பினர் ஒருவர் தொடர்பாக சத்தியராஜ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்பட்டதை விடுதலைப் புலிகள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். ஆயுதங்களற்ற நிலையில் அவர் அரசியல் பணியாற்றி வந்தவர் என்று தெரிவித்துள்ள புலிகள் அவரை உடனடியாக விடுவிக்குமாறும் கோரியுள்ளனர்.

இவரை விடுவிப்பதற்குப் பதிலாகவே செங்கலடியில் தம்மால் கைது செய்யப்பட்ட இரு பொலீஸாரையும் விடுவிக்க புலிகள் இணங்கி உள்ளதாகக் கூறப்படுகின்றது. (ம)

# பாடசாலை மின் கட்டணம் உச்ச வரம்பு பற்றி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

பாடசாலைகள் உபயோகிக்கும் மின்சார அலகுகளுக்கு வலயக் கல்வி அலுவலகங்களூடாக வழங்கப்பட்டு வரும் மாதாந்த உச்ச எல்லைச் செலவு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்புரைக்கமைய வலயக் கல்வி அலுவலகங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ள உச்ச எல்லைகளை பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளன.

இதன்படி 1ஏ.பி தர பாடசாலைகளுக்கு ஆயிரம் ரூபாவும், 1சி தர பாடசாலைகளுக்கு 800 ரூபாவும், 2ஆம் தர பாடசாலைகளுக்கு 500 ரூபாவும் புதிய உச்ச எல்லைகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த உச்ச எல்லைக்கு அதிகமாக மின்சார செலவு ஏற்பட்டால் அத்தொகைக்கான மின் சிட்டையை வலயக் கல்வித்திணைக்களத்தில் சமர்ப்பித்துப் பணமாகப் பெறலாம்.

அதிபர்கள் வலயத்துக்கு கையளிக்கும் மின் சிட்டைக்கு ஒரு பதிவேட்டைப் பேணவேண்டும்.

பாடசாலை அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி, மாணவர் விடுதி போன்றவற்றுக்கு வெவ்வேறு மின்மானி வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இவற்றுக்கான செலவு தொகைகள் வலய அலுவலகங்களினால் வழங்கப்படமாட்டா.

மற்றும் பாடசாலை நிர்மாணப் பணிகளுக்கும், பிற நிறுவனங்களால் பாடசாலைகளில் நடத்தப்படும் விழாக்களுக்காக பயன்படுத்தும் மின்சாரத்துக்குமான செலவுகளை அந்தந்த நிறுவனங்கள், ஒப்பந்தகாரர்களிடமிருந்தே அறவிட்டுக்கொள்ளவேண்டும் என்றும் -

வலயக் கல்வி அலுவலகங்களினால் அறிவிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

# கணனி பொது அறிவுப் போட்டி

அச்சுவேலி,ஜூன்14

யாழ். மாவட்ட கல்வி வலயங்களும் இன்ரெல் (Intel) நிறுவனமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களிடையிலான கணனிப் பொது அறிவுப் போட்டி இன்று காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகந்தருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-11)

# பொது அறிவுப் பரீட்சை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்14

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தினால் பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த வேள்வியை முன்னிட்டு நடத்தப்பட்ட 12 ஆவது பொது அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா இன்று மாலை 7மணிக்கு நா.சுரேஸ் தலைமையில் நிலைய அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் நயினாதீவுப் பொறுப்பாளர் என்.ஈசன் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வர். பரிசில் வழங்கலைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். (எ-10)

# மூதூரில் 2 தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் துன்புறுத்தல்

திருகோணமலை,ஜூன்14

மூதூர் கிழக்கு, பாட்டாளிபுரம் பகுதியைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களைக் கடற்படையினர் கடுமையாகத் தாக்கியதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெற்றிவேல் கிரிதரன் (வயது 20), கனகசபை நாகேந்திரன் (வயது 21) ஆகிய இரு இளைஞர்களுமே கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு மிகமோசமாகத் துன்புறுத்தப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

திருமண வீடு ஒன்றுக்கு செல்வதற்காக மூதூர் துறைக்குச் சென்ற சமயம் கடந்த புதனன்று காலை 9 மணிக்கு கடற்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாலை 5 மணிவரை மூதூர் மத்திய கலாசார நிலைய கடற்படை முகாமில் வைத்து கடற்படைச் சிப்பாய்களால் துன்புறுத்தப்பட்டுள்ளனர். அதன் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை தாம் தாக்கப்பட்ட விடயம் குறித்து கண்காணிப்புக் குழுவில் இரு இளைஞர்களும் முறையிட்டுள்ளனர். (ம)

### உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

வலி.கிழக்கு பிரதேச சபையும்
புத்தூர் கலைமதி முன்பள்ளியும் இணைந்து நடத்தும்

**மாபெரும் மாட்டு வண்டிச்சவாரிப் போட்டி**

இடம : நீர்வேலி சவாரித்திடல்
காலம் : நாளை(15.06.2003) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.00 மணிக்கு(புதியநேரம்)

08.06.2003 இல் நடைபெறவிருந்த மேற்படி போட்டி மழை காரணத்தினால் பிற்போடப்பட்டு 15.06.2003இல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டிக்கு வன்னி மாவட்ட காளைகளும் பங்குபற்றலாம் என்பதையும் அறியத்தருகிறோம்.

*கலைமதி முன்பள்ளி,*
*புத்தூர் மேற்கு.* (19119) -நிர்வாகிகள்

### தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்க

**வருடாந்த பொதுக்கூட்டம்**

காலம் :- 22-06-2003ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- சங்க மண்டபம்

தயவுசெய்து சங்க பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும தவறாது சமுகம் கொடுக்கவும்.

**குறிப்பு:-** இந்த அறிவித்தலை சட்டப்படியானதாகக் கருதுமாறும் நிகழ்ச்சி நிரல் நேற்று அனுப்பப்பட்டுள்ளது. இன்று விடுமுறை நாளாக இருப்பதனால் பிந்தக்கூடும் என்ற காரணத்தால் இதன மூலம் வெளிப்படுத்துகின்றோம்.

நிகழ்ச்சி நிரல் அறிவித்தல் கிடைக்காதவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

*தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம,*
*கைதடி.* (C/28404) தலைவர்: சி.சுப்பிரமணியம்

### போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜுன்14

அளவெட்டி மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டிலான தொழில்நுட்ப அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்

பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெறாத பரீட்சார்த்திகள் நாளை பிற்பகல் 2மணிக்கு முன் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்து அனுமதி அட்டைகளைப் பெறலாம் என்று சங்கச செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஓ-3)

### WALK-IN INTERVIEW

will be held on Monday 16.06.2003 from 10.00 a.m. to 1.00 p.m. to select personnel for the under mentioned post

1. Accounts Clerk
2. Administrative officer
3. Computer Technician

Suitable candidates should produce relevant certificates to testify to their qualification and experience.

**Sun Computers,**
C/O Director,
IIS Group,
100, Clock Tower Road,
Jaffna.

(C/28409)

### JAFFNA SOCIAL ACTION CENTER

159, 4th Cross Street, Jaffna. T.P.-222 3699

**Vacancy for the following Post:-**

**1. project officer**

required Qualification

- Secondary Education
- Experience:-
  - i. Minimum of 2 years working in the area of Social Services, Development and/or Gender issues
  - ii. Some relevant experience in working with vulnerable members of the community
- Committed to Social justice and assistance for vulnerable women
- Very good communication & Problem solving skill preference will be given to those from Thenmaradchy

Please submit application to the above address on or before June 25th 2003

(C/28408) Co-ordinator, JSAC

## மரண அறிவித்தல்

### வண.அன்ரனி அரியரட்ணம் போல்

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண.அன்ரனி அரியரட்ணம் போல் அவர்கள் நேற்று (13-06-2003) வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் வினோதினியின் அன்புக் கணவரும் மில்றோய்(**U.S.A**), கபிரியேல்(சென்னை கிறிஸ்தவக்கல்லூரி), யோகான்(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது அஞ்சலி நிகழ்வு 16-06-2003 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறும். இறுதி நல்லடக்க ஆராதனை மாலை 3 மணிக்கு வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபைப் பேராலயத்தில் நடைபெற்று நல்லடக்கம் வட்டுக்கோட்டைச் சேமக் காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கல்லூரிச் சமூகத்தினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டுக்கோட்டை* (C-28405)
தகவல்:
உப அதிபர்,
றோயல்.ஏ.விமலேந்திரன்.

# பதினெட்டு ஆண்டு கால ஆசிரியப் பணியில் நிறைவு காணும்

## பகுதித் தலைவர்

## திருமதி இரத்தினரஞ்சினி அழகரத்தினம் அவர்களின்

# சேவைநலன் பாராட்டுவிழா 14-06-2003

### கடமையே உருவானவர்

திருமதி இ.அழகரத்தினம் ஆசிரியை அவர்கள் அமைதியும், சாந்தமும் நிறைந்த முகத்துடன் தன் கடமைகளை ஆற்றுவதிலும் மாணவரை அன்புடனும் கண்டிப்புடனும் வழி நடத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே! புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆரம்பப்படி ஆக்குவிப்பாளராகக் கடமையாற்றியதுடன் தரம் நான்கு வகுப்புகளுக்குரிய தர இணைப்பாளராகவும் செயற்பட்டு மாணவரின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்.

தன் சேவையின் ஆற்றலாலும், திறமையினாலும் பகுதித் தலைவராக உயர்ந்தவர். இவருடைய சேவை தொடர்ந்தும் எம் பாடசாலைச் சமூகத்திற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இவரது ஓய்வுக்காலம் அவரது குடும்பத்துடன் சீர் சிறப்புடனும் சுகநலத்துடனும் நீண்ட ஆயுள் உடையதாக அமைய எல்லாம்வல்ல கொன்றலடி விநாயகனைப் பிரார்த்திக்கின்றேன்.

கா.தவராசா.
முன்னாள் அதிபர்,
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.



### தன்னலமற்ற சேவையாளர்

நீண்ட காலச் சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைப் புகழ்பூக்க வைத்த பெருமைக்குரியவராக திருமதி இ.அழகரத்தினம் அவர்களைக் கண்டு வாழ்த்துவதிலே பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். பாடசாலையுடன் கற்பித்தலிலும் வழிகாட்டலிலும் நிர்வாகச் செயற்பாடுகளிலும் இணைந்து மூத்த ஆசிரியை என்ற மதிப்புடன் செயற்பட்டு பொறுமை, அன்பு, தியாகம், கண்ணியம், கட்டுப்பாட்டுடன் பாடசாலை வளர்ச்சிக்காக முழுமையுடனும், உற்சாகத்துடனும் ஆற்றிய சேவையை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் பாராட்டுவதிலும் கௌரவிப்பதிலும் பெருமகிழ்வடைகின்றேன். பதினெட்டு ஆண்டுகள் இப்பாடசாலைக்காக தன்னலமற்ற சேவையாற்றிய தாங்கள் ஓய்வினைப் பெற்றுக் கொண்டாலும் உங்கள் சேவையைப் பாடசாலை நிலையாகப் பதித்துள்ளது. தங்கள் சேவையும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் இப்பாடசாலைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நீடு நலமும் சிறப்பும் பெருக வாழ்த்துவதிலே பேரானந்தமுறுகிறேன்.

திரு.ந.வித்தியாதரன்.
தலைவர், ப.மா.சங்கம்.

### ஆசிரியத்துவத்திற்கு அணி செய்ய உதித்தவர்

ஆசிரியத்திற்கு அணியெனத் திகழ்ந்த அன்னையாய், வழிகாட்டியாய் அர்ப்பணிப்புடன் 34 ஆண்டு சேவையின் நிறைவில் இப்பாடசாலையில் 18 ஆண்டுகள் தொடர் சேவையின் பின் 03.05.2003இல் ஓய்வினைப் பெற்றுக்கொண்ட ஆசிரியை அவர்களை உளம் நிறைந்து வாழ்த்துவதிலே பெருமகிழ்வெய்துகின்றேன்.

பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள், விளையாட்டு, இந்து மன்றம், பரிசளிப்பு விழா, பரீட்சைகள், நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகிய பல்வேறு துறைகளிலும், காலத்துக்குக் காலம் நேர்மையுடனும், சீர்மையுடனும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. பகுதித்தலைவராக பாடசாலை நிர்வாகக் கட்டமைப்புடன் இணைந்த காலை அவரிடமிருந்து பெற்ற அனுபவங்கள், வழிகாட்டல்கள், முன்மாதிரிகள், செயல்திறன்கள் யாவும் வியப்பூட்டும் பெருமைக்குரியன. இவரது காலத்தில் கடமையாற்றியவர்களும் கற்றவர்களும் பாக்கியசாலிகளே. ஆசிரியத்துவ நிலையில் ஜனனித்த அற்புத பிறவியாய் இப்பள்ளியில் தனக்கெனப் புகழ்பூத்த வரலாற்றுக் கோலத்தை பதித்த திருமதி இ.அழகரத்தினம் அவர்கள் சேவையால் உயர்ந்து வாழ் வாங்கு வாழ்ந்து நிற்கின்றார். அவர்கள் குடும்ப நலத்துடன் எண்ணியாங்கெய்தி இன்புற்று நீடு காலம் வாழப் பிரார்த்திக்கின்றேன்.

வே.ஞானகாந்தன்
அதிபர்.

### ஓய்வுபெறும் உத்தமியே!

தன்னலமற்ற சேவை செய்து
தாரணியில் உயர் வானவரே
கற்றோரும் பெற்றோரும் மறவா
காருண்ய தெய்வம் நீரே!

அழகுக்கு அணிகலன் நீங்கள்
அன்புக்கு அணிகலன் நீங்கள்
பொறுமைக்கு அணிகலன் நீங்கள்
போற்றுவதற்குரியவர் நீங்கள்

இனிமையாய் பணி செய்து
இதயத்தில் இடம் பிடித்தீர்
ஆனாலும் உங்கள் பிரிவு
ஆற்றிட முடியாது அம்மா!

தூண் போல நின்று எமக்கு
துணையாய் வழி காட்டினீர்கள்
வேண்டிய சேவை செய்து
வேராக இருந்தீர் அம்மா!

நோய் நொடியின்றி நீங்கள்
நூற்றாண்டு வாழ வேண்டும்
பெருமைபெற்ற உமை வாழ்த்த
பேறு பெற்றேன் நானுமம்மா

திருமதி ரூபாகிருஷ்ணபாலா
ஆசிரியர் நலன்புரிக்கழகம்

### கட்டுப்பாடு மிக்கவர்

இன்று புகழ்பூத்த ஆரம்பக் கல்வி நிறுவனமாக வளர்ச்சி பெற்று விளங்கும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் பதினெட்டு ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள ஆசிரியை திருமதி இரத்தினரஞ்சினி அழகரத்தினம் அவர்களுக்கு இன்று பாடசாலை சமூகத்தினால் எடுக்கப்படும் பிரியாவிடை நிகழ்வையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த பதினைந்து வருடமாக எனக்கு நன்கு அறிமுகமான இவர் பொறுமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவர். மாணவர்களை அன்புடன் அரவணைத்து கல்வி போதிப்பதில் வல்ல ஓர் ஆசிரியராகத் திகழ்ந்ததை நாம் அறிவோம். இவரது கடந்தகால அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டுகின்றேன். ஓய்வுகாலத்தில் சிறந்த தேகாரோக்கியத்துடன் பல சிறப்புகளும் பெற்று நீடூழி வாழ இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

### மாண்புடைய நல்லாசிரியை

திருமதி இ.அழகரத்தினம் அவர்கள் நல்ஆசிரியை, நல்மனையாள், நற்றாயார், மனைத்தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டாற்றகை பேணி சொற்காத்து, சோர்விலாத நங்கையாகிய மனைமாட்சியிற் சிறந்து விளங்கி, நன்கலமாகிய நன்மக்கட்பேற்றினையும் பெற்றுள்ள மாதரசியாவார். பாடசாலையில் [illegible] கடமையைச் செவ்வனே ஆற்றிப் பாடசாலைச் சமூகத்தின் நன்மதிப்பை[illegible] பாராட்டையும் பெறுகின்றார்.

இவ்வாறு [illegible] தற்பள்புகழும் கொண்ட இவர் [illegible] சீரோடும், சிறப்போடும் தன் குடும்பத்தாருடன் [illegible] வாழ [illegible] கொன்றலடி விநாய கனை வேண்டுகின்றேன்.

மு.திருஞானசம்பந்தபிள்ளை
(முன்னாள் அதிபர்)
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

### ஆசிரிய சேவைக்கு பெருமை சேர்த்தவர்

அன்பு, பொறுமை, அடக்கம், துணிவு, கண்ணியம், கட்டுப்பாடு, சகிப்புத் தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஆகிய நல்லியல் பண்புகளால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் தனக்கென அழியா முத்திரை பதித்த ஆசிரியை அவர்கள் சேவையில் நிறைவு பெற்றுள்ளார்கள். அவர்களின் குடும்ப வாழ்வு பல்துறையில் பிரகாசிக்க இதயம் நிறைந்த வாழ்த்துகின்றேன்.

திருமதி ச.காங்கேயன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்க் கோட்டம்.

### ஆசிரிய சேவைக்கு இலக்கணமானவர்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 18 ஆண்டுகாலம் ஆசிரிய சேவையாற்றி பல ஆயிரம் குழந்தைகளுக்கு அறிவுக்கண்களைத் திறந்து வைத்து அவர்களுடைய சீரிய வாழ்வுக்கு அடித்தளமிட்டு அரச சேவையில் இருந்து நிறைவுபெறும் ஆசிரியை திருமதி இரத்தினரஞ்சினி அழகரத்தினம் அவர்களை வாழ்த்துவதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பெண்ணுக்குரிய பெருங்குணங்களையும் ஆசிரியைக்குரிய பண்புகளையும் ஒருங்கே பெற்ற ஆசிரியை அவர்கள் நீண்ட ஆயுளும் நிறைவான செல்வமும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

நா.சுந்தரராசா,
செயலாளர்,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.

# சூழல் சமநிலையைப் பேண வனவளம் காப்பது அவசியம்

இயற்கை வளங்களுள் காட்டு வளமானது முதன்மையானதும் முக்கியத்துவமானதுமாகும். வனங்கள் என்பதை வரைவிலக்கணப்படுத்தின் பௌதிக சூழலுக்கேற்ப தாவரமானது இயற்கையாகவே அடர்த்தியாகவும் பரம்பியும் காணப்படும் செறிந்த பகுதி காடு எனலாம். இக்காடுகள் அண்மைக் காலத்தில் மிக வேகமாக அழிந்து வருகின்றன. பல்வேறு தேவைகளின் நிமித்தம் மனித நடவடிக்கையால் அழிவடைந்து செல்லும் தாவரப் போர்வையால் சூழல் பாதிக்கப்படுகின்றது.

காடுகளானது சூழலில் ஏற்படும் பல்வேறு இயற்கை மாற்றங்களுக்கு காரணமாக இருப்பதுடன், பொருளாதார தேவைகளுக்கும் அவசியமான தொன்றாக உள்ளது. இது மனிதனுடன் நேரடித் தொடர்புகொண்டுள்ளதுடன் உணவு, உறைவிடம், மருந்து, மரம், எரிபொருள் என்பவற்றிற்காக தனது ஒவ்வொரு பகுதியையும் மனிதன் தேவைக்கென வழங்குகிறது. பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் இதனுடைய பங்களிப்பை காணமுடிகிறது.

மேலும் காடுகள் மண்ணரிப்பை தடைசெய்கின்றன, பயிர்ச்செய்கையை பாதுகாக்கின்றன, வெள்ளப் பெருக்கை குறைக்கின்றன, தூயநீர் பெறுதலை உறுதி செய்கின்றன, மனமகிழ்ச்சியையும் பொழுதுபோக்கையும் தருகின்றன, வனவிலங்குகளுக்கு உறைவிடத்தை தருகின்றன. சூழல் மாசடைதலை குறைக்கின்றன, பொதுவாக சூழல் சீரழிவதற்கு எதிரான பாதுகாப்பாக அமைகின்றன.

மனிதனுடைய தொழிற்பாட்டிற்கு உதவும் மரம், மரத்தின் அடிப்படையிலான கைத்தொழில் விளைபொருள்களையும், காட்டுப் பொருள்களையும் தருகின்றது; வேலைவாய்ப்பையும் தருகின்றது. அத்துடன் எரிபொருளாகவும் பயன்படுவதுடன் மண்ணில் ஈரலிப்புத்தன்மையையும் பேணுகிறது. சக்தியாக்கம், உணவு, மண்ணின் பாதுகாப்பு, தாவரப்பாதுகாப்பு, ஆகிய நோக்கில் காடு மிக முக்கிய இயற்கை வளமாகும்.

காலநிலையியல் வேறுபாட்டிற்கேற்ப பரந்துள்ள இயற்கை காடுகளானது இன்று பெருகிவரும் சனத்தொகையின் உணவு, உறைவிடம், தொழில்வாய்ப்பு போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பெரிதும் அழிக்கப்பட்டு வருகிறது. இச்செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட காட்டு வள அழிப்பினால் ஏற்பட்ட சூழலியல் மாற்றங்கள், இயற்கை சமநிலையில் தளம்பல் ஆகியவற்றால் ஏற்பட்ட பிரச்சினைகளை இன்று மனிதன் நேரடியாகப் பார்க்கின்றான்.

காட்டு வளத்திற்கு ஊறு விளைவிப்பதால் அவ்வளம் மட்டும்தான் அறறுப்போகிறது என்று கூறமுடியாது. அது சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பல. அவற்றை நோக்கின் இயற்கை சமநிலையை பேணுவதற்குப் பதிலாக தளம்பலை ஏற்படுத்துகிறது. உயிரினங்கள் வாழ்வதற்கேற்ப ஒரு சூழலை அமைக்க தவறிவிடுகிறது, காலநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது, வளமான மண் அரிக்கப்படுகிறது.

கட்டுமானத் தேவைகளுக்கும், எரிபொருள்களுக்கும் பயன்படுத்தப்படுகின்ற மரங்கள் ஒரேநேரத்தில் அழிவடைகின்றன. இதனால், வளிமண்டலத் தில் காபனீரொட்சைட்டின் வீதம் அதிகரிக்கிறது. இதன் பாதிப்பினால் ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டுள்ளது. மனித நடவடிக்கை காரணமாக காட்டுத் தாவரங்களுக்கு மட்டுமல்ல விலங்குகளின் வாழ்வுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

**எ.டொமிற்றா**
**யாழ்.பல்கலைக்கழகம்**

மனிதன் சொந்த விருப்பத்திற்கேற்ப காட்டுவளத்தை அழிக்கின்றமையால் சுமார் 3,000 .மில்லியன் ஆண்டு காலமாக நிலவிய சூழலில் இயற்கை சமநிலை தகர்ந்துள்ளது. காடுகளை அழிப்பதால் அரிய இன தாவரங்களும் விலங்குகளும் அழிகின்றன. காடழிப்பினால் ஏற்படுகின்ற மழைவீழ்ச்சிக் குறைவினால் நீர்ச் சமநிலை பாதிப்படைகின்றது. காபனீரொட்சைட்டை உறிஞ்ச போதிய தாவரங்கள் இன்மையால் வளிமண்டலத்தில் வாயுக்களின் சமநிலை தளம்புகிறது. சூரியனில் இருந்து வரும் கதிர்களை உறிஞ்ச காடுகளின்மையால் நேரடியாக வரும் கதிர்களால் பூமியில் வெப்பம் கூடும். ஆவியாக்கம், ஆவியுயிர்ப்புக்களில் ஏற்படும் மாற்றம், மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்றின் அளவு என்பவற்றில் இது மாற்றத்தை ஏற்படுத்துவதால் சமநிலை பாதிக்கப்படும். இதன் விளைவாக சூழல் பாதிக்கப்படுகிறது.

காட்டு [illegible]ளங்கள் அழிக்கப்படுவதன் கார[illegible]ாக உயிரியற் சூழல் தாக்கம் ஏற்பட்டு நுண்ணங்கிகள் முதல் பெரிய விலங்குகள் வரை அழிகின்றன. இக்காடுகளுக்குரிய நுண் கால நிலையானது நேரடியாகவும் விரைவாகவும் பாதிப்புக்குள்ளாகின்றது. இச்செயற்பாடு காலநிலையில் மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சூரியனில் இருந்து வீசப்படும் கதிர்களின் நேரடித்தாக்குதலுக்கு பூமி உட்படுகிறது. இதனால், மனிதன் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறான், மழைவீழ்ச்சி குறைகிறது வரட்சி ஏற்படுகிறது.

காடுகள் பரந்த அளவில் அழிக்கப்படுவதால் மண் உலர்ந்து வெடிப்பு ஏற்பட்டு அதனூடாக மழைக்காலத்தில் நீரானது உட்சென்று அரிப்பை ஏற்படுத்துகிறது. மண்ணில் நீர்தேங்கி நிற்காது கழிவு நீராக வெளியேறுகிறது. இதனால், மண்ணில் உள்ள பசளை சேதனப்பொருள்கள், கனியுப்புக்கள் கழுவப்பட்டு அசேதனப்பொருளாகி மண்ணின் வளம் குறைகிறது. நீரினால் அடித்துச்செல்லப்படும் மண ஆறுகளிலும் குளங்களிலும் படிவதால் அவற்றின் ஆழம் குறைந்து விடுகின்றது. மழை காலங்களில் நீரைத் தேக்க வழிகள் குறைவதனால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

இலங்கையில் சேனைப்பயிர்ச் செய்கை, குடியிருப்புக்கள், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றிற்காக பெருந்தொகையான காடுகள் அழிக்கப்படுகின்றன. 1900 ஆம் ஆண்டு 70வீதமாகக் காணப்பட்ட காடுகள் நாட்டின் தேவைகளின் அதிகரிப்பினால் 1982ஆம் ஆண்டளவில் 25வீதமாக குறைந்துள்ளது.

எனவே, நமது நாட்டின் நமது பிரதேசத்தின் காட்டு வளங்களை அழித்து இயற்கை சமநிலையை தளம்பலுக்கு உட்படுத்தாமல் முடியுமான வரையில் காடுகளைப் பாதுகாப்பது அவசியம். சூழலை மீளவளமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மனித நடவடிக்கையினால் சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட வனவளங்களின் அழிவினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல. இது வனங்களின் பாதுகாப்பு அவசியத்தை உணர்த்தியமையால், ஜூன் 5ஆம் திகதி சூழல் பாதுகாப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது மக்களின் அபிவிருத்தி செயற்பாட்டில் ஒரு சிறந்த திட்டமாக நின்று வழிகாட்டுகின்றது. வனவளம் பேணுவதன் மூலம் சூழல் சமநிலையை பேணுவது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும். இதன மூலம் வளமான ஒரு சமுதாயம் உருவாகும். ★

# மறுக்கப்பட்ட உரிமைகள் குறித்து சிந்திக்க வைத்த பொங்கு தமிழ்

## பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 14

மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றி சிந்திக்க வைத்தது - உலகுக்கு வெளிப்படுத்தியது - பொங்குதமிழ் நிகழ்வே.

- யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த இருபது ஆண்டுகாலமாக பேசாமடந்தைகளாக இருந்த தமிழ் மக்கள் 2001ஆம் ஆண்டு தமது உரிமைகள் பற்றி தமக்குள் கலந்துரையாடி அதுபற்றி தெளிவடைந்தனர். அத்துடன், இதன் அடிப்படையிலேயே 2001 தை 17இல் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டு தமது விருப்பங்களை வெளிப்படுத்தியதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு எமது மறைக்கப்பட்ட பிரச்சினைகள், மறுக்கப்பட்ட உரிமைகள் பற்றித் தெளிவுபடுத்தமுடிந்தது. அதற்கு அவர்களது ஆதரவையும் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

அதன்மூலம் எமது பிரதேசத்தில் நடந்த யுத்தத்தினை நிறுத்தி உயிரிழப்புகள், சொத்து அழிவுகளையும் இரத்த ஆறு ஓடுவதையும் நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க கூடியளவு மாற்றம் ஏற்பட்டது.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஆறுசுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையிலும், மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோன்றவில்லை. இதற்குக் காரணம் மக்களது வீடுகள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், கோயில்கள், தொழில்நிறுவனங்கள் போன்றவற்றில் இராணுவம் நிலைகொண்டிருப்பதாகும்.

இந்த இராணுவம் தமிழ்மக்களின் பாதுகாப்புக்காகவே அந்த இடங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தை மக்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுவது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமெனவும் உண்மைக்குப் புறம்பான ஒரு மாயையை உருவாக்கி அதனை சர்வதேச சமூகத்துக்கு அரசு கூறி வருகின்றது.

உண்மைக்குப் புறம்பான - அரசின் பொய்யான - தகவலை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்ட வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இந்நிலையில் மக்கள் கடந்த ஒருவருட காலமாக மௌனமாக இருந்துவருவதால், சர்வதேச சமூகம் அரசின் கருத்துக்களை ஏற்றது போல அரசுக்கு எவ்வித அழுத்தங்களையும் கொடுக்காது மௌனமாக இருந்து வருகிறது.

இந்நிலையில் தமிழ்மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு எமது கருத்துக்களை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவோமாயின் சர்வதேச ஆதரவைப் பெறுவதன் மூலம் எமது அன்றாட - அடிப்படையான - பிரச்சினைகளுக்கு சரியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உலகில் இனரீதியாக அடக்கப்பட்ட - உரிமைகள் மறுக்கப்பட்ட - இனங்கள் தமது உரிமைக்கான போராட்டங்களில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெற்றுள்ளன. அந்த நாடுகளில் நடைபெற்ற உரிமைக்கான போராட்டங்களில் அந்த இனத்தைச் சார்ந்த அனைத்து மக்களும் தமது உரிமைகள், பிரச்சினைகள் தொடர்பாக தமக்குள் கலந்துரையாடி தெளிவடைந்த நிலையில் அவர்கள் ஒற்றுமையாக ஓரணியில் நின்றதன் மூலம் தமது உரிமைகளை வென்றெடுக்க முடிந்துள்ளது. அதுவே உலக வரலாறு ஆகும்.

இதற்காக அனைத்து மக்களும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக இம்மாதம் 27ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் அனைவரும் ஒன்றுகூடுவோம். எமது கருத்துக்களை, ஆசைகளை சர்வதேச சமூகத்துக்கும், அரசாங்கத்துக்கும் உரத்துக் கூறுவோம். இதன் மூலம் மீண்டும் ஒரு யுத்தமின்றி - ஒரு துளி இரத்தம் சிந்தாது - உயிரிழப்புக்கள் இன்றி எமது வாழ்விடங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கும் எமது பறிக்கப்பட்ட, மறுக்கப்பட்ட உரிமைகளை பெற்றுக்கொள்வதற்குமாக இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒரு நாளில் ஓர் அணியில் ஒன்று கூடுவோம். உரிமைகளை வென்றெடுப்போம் என்று அதில் உள்ளது. (எ-10)

# இலங்கை-தாய்லாந்து உறவை சித்திரிக்கும் ஓவியப் போட்டி

## மாணவர்கள் பங்குபற்ற வாய்ப்பு

கொழும்பு,ஜூன்14

இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய இருநாடுகளும் இணைந்து தமது நாடுகளுக்கு இடையிலான உறவுமுறையைச் சித்திரித்துக் காட்டும் வகையில் சித்திரப் போட்டி ஒன்றினை பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தவுள்ளன.

இப்போட்டியின் மூலம் பல நூற்றாண்டு காலமாக இவ்விரு நாடுகளுக்கும் இடையில் பேணப்பட்டு வரும் இறுக்கமான உறவுமுறை தொடர்பாக மாணவர்களும் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள், அவர்களின் வயது அடிப்படையில் மூன்று பிரிவினராக வகைப்படுத்தப்பட்டு போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

6வயது தொடக்கம் 8வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவினராகவும், 8வயது முதல் 12வயது வரையான மாணவர்கள் அடுத்த பிரிவினராகவும், 12வயது முதல் 16வயது வரையான மாணவர்கள் மூன்றாவது பிரிவினராகவும் பங்குபற்ற முடியும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தமது சித்திரத்துடன் வயது, பெயர், விலாசம் ஆகியவற்றைத் தாம் கற்கும் பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் உபாலி எஸ்.ஜயசேகர, பி-7, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04. என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு மின்சார விநியோகம் இல்லை

## நிரந்தர வைத்தியரும் நியமிக்கப்படவில்லை

சண்டிலிப்பாய்,ஜூன்14

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு இதுவரை மின்சார விநியோகம் செய்துகொடுக்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தகால போர் அனர்த்தங்களின் போது தரைமட்டமாக்கப்பட்ட இவ்வைத்தியசாலைக் கட்டடம் அண்மையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. விநியோகத்துக்கான வயர் இணைப்புகள் மற்றும் மின் உபகரணங்கள் யாவும் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால், மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

பண்டத்தரிப்பு - மாதகல் வீதியில் உள்ள பிரதான மின் கம்பத்திலிருந்து சுமார் அரைக் கிலோமீற்றர் தூரத்திற்கு மின்கம்பிகள் பொருத்தப்பட்டு அங்கிருந்தே வைத்தியசாலைக்கு மின் விநியோகம் செய்யப்படவேண்டும். இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாரத்தில் மூன்று தினங்கள் மட்டும் இந்த வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருகின்றது. திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மட்டும் வைத்திய அதிகாரி இங்கு வந்து சிகிச்சையை வழங்கி வருகின்றார்.

இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்துத் தருமாறும் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் பல தடவைகள் நேரிலும், கடிதங்கள் மூலமும் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை நிரந்தர வைத்திய அதிகாரி எவரும் இங்கு நியமனம் செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரு வருடங்களுக்கு முன்னர் புதிதாக நிறுவப்பட்டு இதுவரை திறக்கப்படாதிருந்து வரும் ஆண் - பெண் வார்ட்டுகளும், பிரசவவிடுதியும் இயங்குவதற்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படுவது மிகவும் அவசியம் என்று அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். (ம-135)

# மண்டலாபிஷேக பூர்த்தியும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஜூன்14

நீர்வேலி தெற்கு ஒல்லை வேம்படி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவை முன்னிட்டு இன்று காலை 10 மணிக்கு நூற்றெட்டு சங்குகளால் அபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீடு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் பிரதம அதிதியாகவும் கலந்துகொள்வார். இந்து சமய விவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் சிறப்புரையினை நிகழ்த்துவார். (ரி)

# உப்பள ஊழியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்14

வடபிராந்திய உப்பள ஊழியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இல.321,ஏ.வி றோட், அரியாலை எனும் முகவரியில் உள்ள மாந்தை உப்பு லிமிட்டெட் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல நிரந்தர ஊழியர்களையும் பிறப்புச் சான்றிதழ், நியமனக் கடிதம் ஆகியன சகிதம் தவறாது சமுகமளிக்குமாறு உற்பத்தி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம்


யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ். கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள வர்த்தகம், ஆங்கிலம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால பயிற்சி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியர் சேவை தரம் -I, தரம்2-I ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாகவும், யாழ் வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பவர்களாகவும் உள்ளோர் இதற்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

கொழும்பு,, கிராண்ட்பாஸ் லயன்ஸ் கழகத்தின் 26ஆவது ஆண்டு நிறைவையொட்டி லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோவிலும் கிராண்ட் பாஸ் லயன்ஸ் கழகமும் இணைந்து வடக்கு - கிழக்கில் உள்ள ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகளை அன்பளிப் பாக வழங்கின.

அவற்றை லயன்ஸ் மாவட்ட ஆளுநர் ஒரிகன் பின்கேயிடமிருந்து மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சி.மௌனகுருசாமி பெற்றுக் கொள்வதையும் அருகில் லயன் தலைவர் லயன் எஸ்.ஸ்ரீரங்கன் உட்பட ஏனைய பிரதிநிதிகளையும் காணலாம்.



# ஐந்து உற்பத்திக் கிராமங்கள் அபிவிருத்திக்கெனத் தெரிவு

தென்மராட்சி,ஜூன்14

கிராமிய பொருளாதார அமைச்சு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கிராமங்களை உற்பத்திக் கிராமங் களாக தெரிவு செய்துள்ளது.

இந்தக் கிராமங்களில் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் அல் லாரை கிராமமும், யாழ்ப்பாணம் பிரதே சத்தில் குருநகர் கிராமமும், பருத் தித்துறை பிரதேசத்தில் ஆதிகோயி லடி கிராமமும் -

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இளவாலைக் கிராமமும், கோப்பாய் பிரதேசத்தில் நீர்வேலி கிராமமும் இவ்வாறு உற்பத்திக் கிராமங்களாகத தெரிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# கலந்துரையாடல்கள்

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்த்துகை அமைச்சின் இவ்வாண்டிற்குரிய செயற்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர் வரும் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அபி விருத்தித் திட்டத்தின் பௌதிக நிதி முன்னேற்ற அறிக்கை, திட்டம் நிறைவு பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் கால வரையறை என்பன பற்றி கலந்துரை யாடப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள் ளூராட்சி மன்றங்களின் தலைவர், செயலாளர்களை இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என யாழ். செயலக திட்டமிடற் பணிப்பாளர் புகழ் தரம்பிள்ளை கேட்டுள்ளார்.(எ-5-185)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ்.மாவட்ட வர்த்தக வங்கிகள் மூலம் சிறு நடுத்தரக் கைத்தொழில் முதலீட்டாளர்களுக்கு கடன் பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமான கலந்துரை யாடல் நாளை காலை 10மணிக்கு நல்லூர் செம்மணி வீதியில் அமைந் துள்ள யாழ்ப்பாண வர்த்தக கைத் தொழில் மன்ற அலுவலகத்தில் நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கலந்துரையாடலில், யாழ்.மாவட் டத்திலுள்ள சகல வர்த்தக வங்கி முகாமையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதால் குடாநாட்டிலுள்ள அனைத்து சிறு நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கைத்தொழில் மன்றச் செயலாளர் எஸ்.செந்தகுமார் கேட்டுள்ளார். (எ-5)

## குழாய்க்கிணறு அமைக்க ஏற்பாடு

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதி களில் புதிதாக குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

புதிதாக குழாய்க்கிணறுகள் அமைக்கப்படவேண்டிய சனசமூக நிலையங்கள், பொதுஅமைப்புக்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக மானிப்பாய் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளவேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (எ-185)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு.மு.சே.இராசையா அவர்கள்

கைதடி கிழக்கு சனசமூக நிலையம், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர்

உயர்திரு.மு.சே.இராசையா

அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் உயர்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் பிரசித்த நொத்தாரிசுவாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெரும் மகிழ்வுகொள்கின்றோம்.

இவர் மென்மேலும் பல்லாண்டு வாழ்ந்து சேவையுரிய இறைவன் அருள் கைகூடுவதாக.

*கைதடி கிழக்கு சனசமூக நிலையம்.*
*கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்றம்.*
*கைதடி கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சங்கம்.*
*கைதடி கிழக்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம்.*

(c/28400)


## தொழிலாளர்கள் தேவை

**கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளோர் உடன் தேவைப்படுகின்றனர்.**

1. கட்டட மேற்பார்வையாளர்.
2. பாதுகாப்பு உத்தியோகத்தர்.
3. பார ஊர்தி சாரதிகள்
4. மேசன்.
5. தச்சுத் தொழிலாளர்.
6. கூலித் தொழிலாளர்.

தகுதியானவர்கள் சுயவிவரங்களுடன் பத்து நாள்களுக்குள் அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தகுந்த வேதனம் வழங்கப்படும்.

**மனிதவள முகாமையாளர்.**
**யூ ரோவில்,**
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(c/28402)

## வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடும் வேலைகளுக்கான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 2003.07.02ஆம் திகதியன்று மு.ப.10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப.10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ.இ. | பாடசாலையின் பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 01 | யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. 40'X25' செயற்பாட்டறை அமைத்தல் | 500/- | 10,000/- |
| 02 | யா/இடையாணன் அ.த.க.பா. 60'X25' இரு வகுப்பறைகள் அமைத்தல் | 500/- | 10,000/- |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் தரம் 08ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்தவர்களும் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள் ஆவர்.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்க் கப்படாத கேள்வித் தொகை (VAT) என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

03. மேற்கூறப்பட்ட கேள்விப் பணத்தைத் தங்களுக்கு வசதியான வங்கியில் இட்டு, வலயக்கல்விப் பணிப் பாளர், வடமராட்சி என்ற பெயருக்கு வங்கி வழங்கல் கட்டளையைப்பெற்று, வடமராட்சி வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் ஒப்படைத்து கேள்விப்பத்திரங்களை 2003.06.17 ஆம் திகதி தொடக்கம் 2003.06.21ஆம் திகதி மு.ப.12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்விப் பத்திரங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு, மூலப்பிரதியும், இணைப்பிரதியும் தனித் தனி இரு கடித உறைகளில் இடப்பட்டு, உறைகளில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே இரு உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும், பிறிதொரு கடித உறையில் இட்டு, ஒட்டப்பட்டு, ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு வலயக்கல்விப் *பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி* என முகவரியிட்டு, வலயக்கல்வி அலுவலகத்தின், வலயக்கல்விப் பணிப்பாளர் அறையிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 2003.07.02 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப் பிட்ட நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங்கள் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் திகதியில் இருந்து 4 மாதங்களுக்குள் வேலையைப் பூர்த்தி செய்து, கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆவணங் கள் சரியாக இணைக்கப்படாத, சரியாக நிரப்பப்படாத பிழையான கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விபரங்களை வடமராட்சி வலயப் பாடசாலை வேலைகள் கிளையில், கட்டடப் பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றேன்.

*பாடசாலை வேலைகள் பகுதி,*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*வடமராட்சி.*

(C/28401)

**வே.தி.செல்வரத்தினம்,**
கேள்விச் சபைத்தலைவர்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
-
08
-
1958



மறைவு
14
-
06
-
1997

### அமரர் அப்பையா ஜெயராசா

ஆண்டுகள் ஆறும் ஆனதுவோ அந்தோ நீர் எமைப்பிரிந்து
தாண்டாமணி விளக்காய் விடெங்கும் ஒளிவீசி நின்றீரே!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?
கண்டு உண்மை நினைந்தே இப்பூவுலகில் வாழுகின்றோம்.

7/1, சுன்னச்சந்திர லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினரும், உறவினரும்.

(13120)

# விளையாட்டு

## கராச்சியில் விளையாட நியூஸிலாந்து தயக்கம்

பாகிஸ்தானுக்கெதிரான கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் எதுவும் கராச்சியில் நடத்தவேண்டாம் என்று நியூஸிலாந்து கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி கடந்த 2001 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை பாதியில் முடித்துக் கொண்டு தாயகம் திரும்பியது. இதனால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதற்காக நியூஸிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தானுடன் விளையாடவுள்ளது.

இந்த முறை கராச்சியில் மோதல் எதுவும் வைக்கவேண்டாம் என்று நியூஸிலாந்து கிரிக்கெட்சபை சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அதிகாரி ரமீஸ் ராஜா இந்தத் தகவலை ஒத்துக்கொண்டார். கடந்தமுறை நியூஸிலாந்து அணி கராச்சி ஹோட்டலில் தங்கியிருந்த போதுதான் ஹோட்டல் அருகே குண்டு வெடித்தது. இதன் காரணமாக பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை பாதியில் நிறுத்திவிட்டு நியூஸிலாந்து அணி தாயகம் திரும்பியது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள்

வலி.வடக்கு,ஜூன்14

யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள சங்க மைதானத்தில் இடம்பெறும்.பெண்கள் அணிகளுக்கிடையிலான ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

பிற்பகல் 4 மணிக்கு - அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் அரியாலை ஜெயபாரதி வி.க.

பருத்தித்துறை ஐக்கிய வி.க. எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க.

மாலை 5மணி ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க.

நாயன்மார்கட்டு பாரதி வி.க எதிர் அரியாலை ஜெயபாரதி வி.க. (ஒ-5-86)

★ ★ ★

கிராம சேவையாளர் பொ.க.முருகானந்தம் ஞாபகார்த்தமாக வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையில் கிரிக்கெற் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பதிவு செய்த கழகங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை உதவி அரச அதிபர் பணிமனையில் ஒப்படைக்குமாறு விளையாட்டு அலுவலர் பி.முகுந்தன் கேட்டுள்ளார். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 8.30 மணிக்கு - கொக்குவில் கே.சி.சி.சி வி.க. எதிர் மங்ஸ்ரா வி.க.

பிற்பகல் 1.30 மணி - யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் மானிப்பாய் பரிஷ் வி.க. அணி. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளின் மகளிர் அணிகளுக்கிடையேயான பெருவிளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ஆறு தினங்கள் வவனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் 16ஆம், 17ஆம் திகதிகளில வலைப்பந்தாட்டமும் -

18,19ஆம் திகதிகளில் கரபந்தாட்டமும் -

19,20ஆம் திகதிகளில் எல்லேயும் -

20, 21ஆம் திகதிகளில் கபடியும் இடம்பெறவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்14

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பேர்ஸ் வி.கழகமும்; அத்துளு அம்பாள் வி.கழகமும் மோதுகின்றன.

★ ★ ★

## ஸ்கந்தா வி.கழகம் நடத்தும் மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்14

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட மட்டத்தில் மெய்வன்மைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஏட்வீல் மற்றும் த்ஸா ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இந்த மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு கழகங்களிடமிருந்தும், தனிநபர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் செ.வைத்தீஸ்வரன், கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

இதேவேளை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் மற்றும் தெல்லிப்பழைக் கோட்டங்களைச் சேர்ந்த முன்பள்ளிகளும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5-152)


## உடன் தேவை

★ Computer Typist ★ Binder

திறமைக்கு ஏற்ப உயர் மாத வேதனம்.

(19129) விண்ணப்ப முடிவு திகதி 21.06.2003

தொடர்பு:- விளம்பர இலக்கம் 1927

மே/பா உதயன்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி,தோப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இலங்கை வங்கி யாழ்.பிரதேசக்கிளையின் வங்கி உத்தியோகத்தராகக் கடமை புரியும்

**திரு. சின்னத்தம்பி நடேசமூர்த்தி**

சமாதான நீதிவானாக (11.06.2003) புதன்கிழமை அன்று யாழ்.மாவட்ட நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டதையடுத்து மேலும் இவரது சேவை தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

நண்பர்களும்,

(சி-28413) அச்சுவேலி வாழ் மக்களும்.

இம்மாதம் 18 முதல் 22ஆம் திகதிவரை

# டேவிஸ் கிண்ணப் போட்டிகளைக் கொழும்பில் விமரிசையாக நடத்த டெனிஸ் சங்கம் ஏற்பாடு

சர்வதேச டெனிஸ் சம்மேளனத்தினால் நடத்தப்படும் டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டிகள் ஜூன் 18 முதல் 22 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளன.

ஆசியா ஓஷானியா பிராந்தியத்தை சேர்ந்த (குழு-4) 8நாடுகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளமை உறுதி செயயப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, சவூதிஅரேபியா, சிங்கப்பூர், வியட்நாம், ஓமான், பங்களாதேஷ், மியான்மார், புருணை, ஆகியனவே இந்த நாடுகளாகும்.

கொழும்பு கிறீன்பாத்திலுள்ள இலங்கை டெனிஸ் சம்மேளனத்திடலில அப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

டேவிஸ் கிண்ணப் போட்டிகளில் இலங்கை பங்குபற்றிய பொன்விழா ஆண்டு நிறைவடையும் வேளையில் டேவிஸ் கிண்ணப் போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கையின் டேவிஸ் கிண்ணப் பொன்விழா தொடர்பான உத்தியோக பூர்வ விருந்துபசாரமொன்று நடைபெறவுள்ளது. அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதில் பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

எதிர்வரும் 17ஆம் திகதிஇப்போட்டிகளுக்கான குலுக்கல்கள் நடைபெறவுள்ளன. 18ஆம் திகதி காலை 8.30 மணிக்கு போட்டிகள் ஆரம்ப மாகவுள்ளன.

1953ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது டேவிஸ் கிண்ண அணியில் இடம்பெற்ற வீரரான எல்.பி. ஏர்ன்ஸ்ட் போட்டிகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இப்போட்டிகளில் முதலிரு இடங்களைப் பெறும் அணிகள் அடுத்த வருடம் குழு 3இற்கு தரமுயர்த்தப் படும்.என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளுக்கான இலங்கை அணிக்கு 9வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு பல பயிற்சிப் போட்டிகளின் பின் 4வீரர்கள்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ராஜீவ் ராஜபக்ஷ(25), ஹர்ஷா கொடமான்ன(18), பிராங்ளின் இமானுவல்(15), ரொஹாண்டி சில்வா(31), ஆகியோரே இவர்களாவார். இசுரு குணசேகர இலங்கை அணியின் போட்டியில் பங்கு பற்றாத் தலைவர் ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

பயிற்சிகளின் சிறப்பம்சமாக டேவிஸ் கிண்ணப்போட்டிகளில் அனுபவமிக்க இந்திய வீரர்கள் இருவருடன் இலங்கை வீரர்களைப் போட்டியிடச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் மூன்றாவது நிலை வீரரும் 6தடவை டேவிஸ் கிண்ணப் போட்டிகளில் பங்கு பற்றியவருமான விஜய் கண்ணன், இந்தியாவின் 11 ஆவது நிலை வீரரும் 1996 முதல் 99வரை டேவிஸ் கிண்ணப்போட்டிகளில் பங்கு பற்றியவருமான கமலக் கண்ணன் ஆகியோருடன் பல போட்டிகளில் இலங்கை வீரர்கள் மோதினர்.

'இந்தியா உலகத் தரமான டேவிஸ் கிண்ண நாடு.' கண்ணன் சகோதரர்கள் எமது வீரர்களை விட உயர்தரமாக விளையாடியுள்ளனர். மிகுந்த அனுபவமுடையவர்கள் அவர்கள்.

எனினும், எமது பயிற்சிகளில் இறுதியில் கமலக்கண்ணனை தோற்கடிக்கும் நிலைக்கு எமது வீரர்கள் ராஜீவ் ராஜபக்ஷ முன்னேறினார். இந்திய வீரர்களுக்கான போட்டிகளின் மூலம் எமது வீரர்கள் அனைவரும் சிறந்த பலனைப் பெற்றுள்ளனர். -இவ்வாறு இலங்கை அணியின் பயிற்றுனர் அருள் அமல்நாதன் கூறினார். இவர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

இலங்கையில் நடைபெறும் போட்டிகளுக்காக 40 லட்சம் ரூபாவை இலங்கை டெனிஸ் சங்கம் செலவிடவுள்ளது.

இதேவேளை, இப்போட்டிகளுக்கான இலங்கை அணிக்கு அக்ரெக்ஸோ நிறுவனம் 10லட்சம் ரூபா அனுசரணை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கை டெனிஸ் சம்மேளன தலைமையகம் மற்றும் ஆடுகள அபிவிருத்திக்கான 15லட்சம் ரூபாவையும் இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

## குளூஸ்னர் குறித்து பொலொக் கருத்து

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் லான்ஸ் குளூஸ்னர் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும். இவ்வாறு அவ்வணியின் முன்னாள் தலைவர் ஷோன் பொலொக் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த உலகக்கிண்ண தோல்விகளின் பின் தலைமைப்பதவியில் இருந்து பொலொக் நீக்கப்பட்டார். பின்னர் 22வயதான கிறேம்ஸ்மித் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதேவேளை, சகலதுறை வீரரான லான்ஸ் குளூஸ்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டார். இதன்பின் ஸ்மித் கருத்து தெரிவிக்கையில் குளூஸ்னர் ஓர் அழிவுசக்தி, அவர் அணியின் ஒற்றுமையைக் குலைத்து விடுவார். அதனால் தான் அவர் அணியில் சேர்க்கப்படவில்லை என்று கூறியிருந்தார்.

குளூஸ்னரின் நீக்கமும், அவர் மீதான ஸ்மித்தின் விமர்சனமும் தென்னாபிரிக்க கிரிக்கெட் வட்டாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இவ்விடயம் குறித்து ஷோன் பொலொக் கருத்துத் தெரிவிக்கையில் "நாம் சோர்ந்திருந்த சமயங்களில் லான்ஸ் சிறப்பாக விளையாடியுள்ளார். மீண்டும் தனது நாட்டுக்காக விளையாடி திறமையை வெளிப்படுத்த கூடிய சூழ்நிலையில் அவர் இருக்கிறார் என நம்புகிறேன்.இவர் அணியை வெற்றியீட்டச்செய்யும் ஆற்றலில் உள்ளவர். இன்னும் அவரிடத்தில் திறமைகள் இருக்கின்றன. என நம்புகிறேன்" - என்றார்.

32 வயதான லான்ஸ் குளூஸ்னர், 1999 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாட்டக்காரராக தெரிவானார். அத்தொடரில் தென்னாபிரிக்க அணி அரையிறுதிவரை முன்னேறியது.

இதற்கு லான்ஸ் குளூஸ்னரே காரணம் என தென்னாபிரிக்க அணியின் அப்போதைய பயிற்றுனரான பொப் வூல்மார் கூறியிருந்தார்.

இதேவேளை குளூஸ்னர் விடயத்தில் முரண்பாடு இருப்பினும் தென்னாபிரிக்க அணியில் புதிய தலைவரான கிறேம்ஸ்மித்துக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என ஷோன் பொலொக் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணி அடுத்து இங்கிலாந்து டெஸ்ட் போட்டிகளிலும் முக்கோண ஒருநாள் சுற்றுப் போட்டியொன்றிலும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)


43 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்றோர்

| | |
|---|---|
| சி.சுமிதா | 188 |
| ஆ.யேனுகாஷந் | 175 |
| ர.சிந்துஜன் | 174 |
| கே.யெனன்சைலேஸ் | 171 |
| V.சேயோன் | 169 |
| ர.வதுசனன் | 164 |

அடுத்தபரீட்சை :15.06.2003

யாழ்.நகர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன் ம.அகிலன் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி சிவசொருபம் மயில்வாகனம்**

(11.06.2003) புதன்கிழமை காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

B.சபேசன், திலீபன், R.சண்,ஜெயந்தன் (நண்பர்கள்)

சங்குவேலி. (19126)

## மரண அறிவித்தல்கள்

### V.K.செல்லத்துரை (சித்தப்பா)

(முன்னாள் C.T.B. பரிசோதகர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட V.K. செல்லத்துரை (சித்தப்பா) அவர்கள் (08.06.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.20 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக்கணவரும், கிருஸ்ணகுமாரி (பிரான்ஸ்), கிருஸ்ணவேணி (நீர்வேலி), குருபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவச்செல்வத்தின் (பிரான்ஸ்) அருமைமாமனாரும், கிரிகாந்தின் (பிரான்ஸ்) அன்புப் பேரனும், சதாசிவத்தின் (நெல்லியடி) அன்புத் தம்பியும், லட்சுமியின் (நெல்லியடி) மைத்துனரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் (சாவகச்சேரி) மைத்துனரும், சின்னத்தம்பியின் (நீர்வேலி மத்தி) மைத்துனரும், பரமேஸ்வரியின் (வண்ணார்பண்ணை) மைத்துனரும், துரைராஜா (வண்ணார்பண்ணை), அழகம்மா (சாவகச்சேரி),விஜயலட்சுமி (நீர்வேலி மத்தி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2003) ஞாயிற்றுக் கிழமை காலை 8மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி. நீர்வேலி. (19124) தகவல்: - பிள்ளைகள்.

### திருமதி கிருஸ்ணசாமி செல்லம்மா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான திருமதி கிருஷ்ணசாமி செல்லம்மா 09-06-2003 நள்ளிரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் இளையபிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் அமரர் கிருஷ்ணசாமியாரின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம்(சுவிஸ்); தவரஞ்சினி, கிருபாகரன் (சுவிஸ்), பிரியதர்சனி (சுவிஸ்), நஜனி (ஜேர்மனி), சுதாகரன் (டென்மார்க்), தாரணி(சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும் அருந்ததி (சுவிஸ்), பேரின்பநாயகம், காமினி (சுவிஸ்), கமலநாதன்(சுவிஸ்), நடேசலிங்கம் (ஜேர்மனி), பத்மாவதி (டென்மார்க்), வரதராஜன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்னம்மா, நல்லம்மா, கனகம்மா, அமரர் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தசாமி, அன்னலட்சுமி, இரத்தினசிங்கம், இராஜரத்தினம், இரத்தினம், சின்னத்துரை, சின்னராசா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்சன், நிவிதன், அனிதன், பிரவீனா, காண்டீபன், பிரஷாந்தி, கஜந்தன், தனுஷா, ஆரபி, மயூரனி, பேனினி, ஷாலினி, சர்மிலி, குருஷோத், அபிஷனா, செந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: யே.தவரஞ்சினி (மீரா) கஜந்தாஸ Textile நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.

2B, கவிசுத்தாராம றோட், W.A.சில்வா மாவத்த, வெள்ளவத்தை. (19055)

## 'நியாப்' திட்டத்தின் கீழ்
# உலக வங்கி நிதியுதவியுடன் குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்,14

குடாநாட்டில் உள்ள குளங்களைப புனரமைக்கும் 'நியாப்' திட்டத்தை உலகவங்கியின் நிதியுதவியுடன் தொடா வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த உயா மட்ட கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக 8 கோடி ரூபா செல வில் பத்துத் திட்டங்களை மேற்கொள் வது என்றும்

அதன்பின் மேலும் 10 திட்டங் களை நடைமுறைப்படுத்துவது என் றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் 'நியாப்' திட்டங்களை மேற்கொள்வதற்கென 40 கோடி ரூபா இரு வருடங்களுக்கு முன்னர் ஒதுக் கப்பட்டிருந்தது.

ஆனால், அத்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் அந்த நிதி மீளப்பெறப்பட்டது.

இந்நிலையில் மேற்படி திட்டங் கள் குறித்து மீளாய்வு செய்யுமாறு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்.செயலகம் கோரியிருந்தது.

அதைத் தொடர்ந்து உலக வங்கி அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வாரத தில் யாழ்ப்பாணம் வந்தது.

அரச அதிபர் செயபத்மநாதன் உட் பட பல அதிகாரிகளுடன் அக்குழு கலந்துரையாடியதையடுத்தே குளங் களைப் புனரமைக்கும் திட்டங்களை தொடர்வதெனத் தீர்மானிக்கப்பட் டது. (ஒ-3)

## கைதான பொலீஸாரை செஞ்சிலுவைக்குழு பார்வையிட்டது

மட்டக்களப்பு,ஜூன்14

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடு தலைப் புலிகளால் தடுத்து வைக்கப பட்டுள்ள இரு பொலீஸாரையும் செஞ் சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி கள் நேற்று முன்தினம் பார்வையிட் டனர்.

கரடியனாறுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமில் இரு பொலீஸாரையும் சந்தித்த செஞ் சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரி கள் அவர்கள் நலன்களைக் கேட்டறிந தனர்.

இருபொலீஸாரும் தேகாரோக்கியத துடன் உள்ளனர் என்றும் -

அவர்களுக்கு எவ்வித ஊறும் விளைவிக்கப்படவில்லை என்றும் -

செஞ்சிலுவை அதிகாரிகள் ஏறா வூர் பொலீஸ் நிலையத்துக்கு தக வல்கொடுத்துள்ளனர். (ஒ-3)



கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவரும் அவரது குழுவினரும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்த சமயம் எடுக்கப் பட்டபடம்.

## விசர்நாய் கடித்த நபர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்14

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் விசர்நாயால் கடியுண்டு அதற் குத் தகுந்த தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ளத் தவறிய ஒருவர் விசர்நாய் கடியினால் ஏற்படும் நீர் வெறுப்பு நோய் பாதிப்பால் உயிரிழந்தார். இருபா லையைச் சேர்ந்த கே.சிறீதயாளன் (வயது 42) என்பவரே மரணமானவ ராவார். இவருக்கு 3 நாள்கள் நீடித்த காய்ச்சலைத் தொடர்ந்து நேற்று மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகவும் -

இதனையடுத்து நேற்றுக் காலை யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரத் தில் அங்கு அவர் மரணமடைந்ததாக வும் - தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## சம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம்.ஜூன்14

அகில இலங்கைத் திருமுறைமன் றத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட் டநாதர் சுவாமி ஆலயத்தில் திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குரு பூசையை முன்னிட்டு அபிஷேகமும் அதனைத்தொடர்ந்து திருமுறை பாராயணமும் நடத்தப்படவுள்ளது.

## 573 தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பட்டுள்ளன.

நியமனம் பெறுபவர்கள் தற் சமயம் பணிபுரியும் பாடசாலைகளி லேயே தொடர்ந்தும் பணிபுரிய வேண்டும் என்றும் -

அவர்களுக்கு இடமாற்றம் வழங் கக் கூடாது என்றும் -

மாகாண கல்வி அமைச்சின் செயல லர்வலயக் கல்விப் பணிப்பாளர் களுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்துள்ளார். தற்போது நியமனம் பெற்றுள்ளவர்கள் ஆசிரியர் சேவை யில் தரம் 3-2 இல் உள்வாங்கப்பட் டுள்ளனர்.

யாழ்ப்பாணம்,வன்னி மாவட்டங் களில் வலய ரீதியான நியமனம் பெறு வோர் விவரம் வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம்-39,வலிகாமம்-49 தீவகம்-08,வடமராட்சி-09,தென் மராட்சி-10.

**வன்னி**

கிளிநொச்சி -135, துணுக்காய்-83, வவுனியாதெற்கு -6,வவுனியா வடக்கு-54,வவுனியா-18,முல்லைதீவு -85,மன்னார் -51,மடு -26

இதேவேளை, அம்பாறை மாவ டத்தில் -152பேரும், மட்டக்களப்பு மாவ ட்டத்தில் -112பேரும், திருகோணமலை மாவட்டத்தில் -76பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

சிங்கள மொழிமூலம் 193 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நாடாளு மன் றத்தில் சட்ட மூலம் இது வரை விவா தத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட வில்லை.

சட்மூலத்திற்கு எதிரான மனுவை விசாரணைசெய்த உயர்நீதி மன்றம், மனுதொடர்பான தீர்ப்பை ஜனாதிப திக்கும் சபாநாயகருக்கும் அடுத்த வாரத்துக்கு முன்னர் அனுப்பவிருப் பதாக அறியப்படுகிறது. இதற்கிடை யில், நாடாளுமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் கூடவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப் படுமா, இல்லையா? என்பது இன்ன மும் நிச்சயமற்ற நிலையிலேயே இருந்து வருவதால் தேர்தல்களுக் கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இத் தேர்தல்கள் இன்னமும் ஒத்தி வைக்கப்படாத நிலையில் தேர்தல் களுக்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதைத் தவிர வேறு வழி யில்லையென தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஆராய்வார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவின் ஆலோசனையின் பேரில் யாழ். வரும் அமைச்சர், பாதுகாப்பு வல யப் பிரச்சினை தொடர்பாக அதிகாரி கள் மற்றும் படைத்தளபதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்துவார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனும் அமைச்சருடன் நிகழ் வுகளில் பங்குகொள்வார். (ஒ-3)

## அரசு மருத்துவர்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகை யில் கூறியதாவது:-

அரச மருத்துவ அதிகாரிகளின் பிரச்சினையில் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தலையிட்டு தீர்வு காண உதவ வேண்டும்.

அரச மருத்துவ அதிகாரிகளுக்கும் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அதி காரிகளுக்குமிடையே நிலவும் சம்பள முரண்பாடு கடந்த 16 ஆண்டுகளா கத் தொடர்கிறது. இதனைத் தீர்க்கும் படி நாம் பல முறை வேண்டுகோள் விடுத்தும் எதுவும் நடைபெறவில்லை.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அரச மருத்துவ அதிகாரிகளுக்கு இடர் காலக் கொடுப்பனவு இடைநிறுத்தப் பட்டுள்ளது. சமாதானம் நிலவினாலும அவர்கள் பல இன்னல்களுக்கு மத் தியிலேயே கடமையாற்றுகின்றனர்.

* எமது இந்த இரு பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும் வரை நாம் வேலைநிறுத்தத்தை கைவிடப்போவ தில்லை என்றும் அவர் சொன்னார். (ஒ-5-10-15-ரி)


**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்
**A/L 2004**
பொருளியல் II
By:சனி
★ ஆரம்பம்:15-06-2003
ஞாயிறு 6.30 a.m.
(19117)

**சிங்களம்**
பேச, எழுத, வாசிக்க
750/- மட்டுமே!
எங்கும் இல்லா சலுகையுடன்
சிங்களத்தில் பூரண அறிவு
பெற்றிட
ஆரம்பம்: 15.06.2003
(ஞாயிறு 7.30)
By: லீலாகிருஸ்ணன்
**யாழ்.கல்வி நிலையம்**
மானிப்பாய் வீதி,
(19103) ஆறுகால்மடம்.

**NEW SCIENCE CENTRE**
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
உயிரியல் (BIO)
ஆசிரியர்: நாகநாதன்
ஆரம்பம்: 17.06.2003 (செவ்வாய்)
நேரம்: காலை 10.00 மணி (19114)

**IPAS gives you**
The Best But Last Opportunity In 2003 After A/L...
யாழ்ப்பாணத்தில் முதன்முறையாகப் பின்வரும் தொழில்சார் கற்கை நெறிகள் பற்றிய விரிவான ஆலோசனை இலவசமாக வழங்கப்படுகின்றது.
Chartered Accountancy
aat
CIMA (U.K.)
☆ புதிய பிரிவிற்கான விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன. சகல கற்கை நெறிகளும் அவற்றின் பாடவிதானத்திற்கு அமைவாக தகுதிவாய்ந்த விரிவுரையாளர் குழுவால் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.
ஆலோசனைகளுக்கும் உடன் பதிவிற்கும்:
IPAS
199, Main Street, Jaffna.
Mobile: 0777 563292 ,0777 270452
0777 563294 , 0777 164466
(சி-28403)

**COMPUTER COURSES**
Batch III June 14th 2003
Time: 10.00 a.m.
பிரிவு III இற்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன. மாணவர் களின் அனுமதிகள் மட்டுப்படுத் தப்பட்டிருப்பதால் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுமாறு அறிவுறுத் தப்படுகிறீர்கள்.
இயக்குநர்,
IIS,
யாழ்ப்பாணம்.
(சி-28348)

**இன்று மங்களகரமான திறப்புவிழா**
"THEVANSON - தேவன்சன்"
மின்சார உபகரணங்கள், P.V.C. குழாய்கள் மற்றும் இணைப்புகள் விற்பனையாளர்.
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள் இன்று (14.06.2003) சனிக்கிழமை பி.ப. 3.30 மணிமுதல் 5.00 மணிவரையுள்ள சுபவேளையில் எமது ஸ்தாபனம் பெரியோர்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.
119,கண்டி வீதி,
சாவகச்சேரி.
(19070)
"THEVANSON"
(கிளையற்ற புதிய ஸ்தாபனம்)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

திருமதி
**சிவகாமி சின்னத்தம்பி**
(இளைப்பாறிய கனிஷ்ட பாடசாலை அதிபர்.
யா/வட. இந்து மகளிர் கல்லூரி)
கரவெட்டி மேற்கு.
கரவெட்டி.
(சி-28366)
அன்புடன் நினைவு கூரும்:
- குடும்பத்தினர்.

**மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு**
அன்புடையீர்!
நிகழும் சுபானு வருடம் வைகாசித் திங்கள் 31 ஆம் நாள் 14.06.2003 சனிக்கிழமை காலை 7.20 மணியளவில் வரும் சுப முகூர்த்த நல்வேளையில்
இல.336,338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**
என்னும் மொத்த, சில்லறை வியாபார ஸ்தாபனத்தை மதிப்புக்குரிய கௌரவ மாண்புமிகு இந்து கலாசார **அமைச்சர் திரு.தி.மகேஸ்வரன்** அவர்கள் திறந்து வைக்கவுள்ளார் என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். அத்தருணம் அனைவரும் சமுகமளித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
சில்லறை வாடிக்கையாளர்களின் நலன் கருதி புதுப்பொலிவுடனும் நவீன வசதிகளுடனும் நல்ல தரமான, நல்ல ரகமான பொருள்களை விரும்பிய அளவுகளில் பொதி செய்யப்பட்ட பக்கட்டுக்களில் மிகக்குறைந்த விலையில் விரைவாகப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நல்ல பொருள்களுக்கு இது ஒரு நம்பிக்கையான ஸ்தாபனம்
336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.3328
(19027)
இங்ஙனம்
உரிமையாளரும் ஊழியர்களும்.

**The John Keells Institute**
Jaffna Center Opening Soon!
An Edexcel approved HND Center.
John Keells
INSTITUTE
100 Clock Tower Road,
Jaffna.
Call 021-2831


இது உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2003இல் அச்சிட்டு